# செந்தமிழ்

| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு 2002 மார்கழி | பகுதி |
| --- | --- | --- |
| 67 | டிசம்பர் — 1971 | 2 |

**சங்கச் செய்திகள்**

## பாராட்டுவிழா

வழக்குரைஞர் **க கந்தசாமி** பி.ஏ.,பி.எல்.,எம்.எல்.ஏ அவர்களுக்கு

தமிழகச் சட்டப் பேரவைக்கு உசிலைத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினருமான வழக்குரைஞர் உயர்திரு. க. கந்தசாமி பி.ஏ; பி.எல்; அவர்களுக்குப் பாராட்டுவிழா தமிழ்ச்சங்க வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மாளிகையில் நடைபெற்றது. சங்கத் துணைத் தலைவர் உயர்திரு. ஆர். செல்லத்தேவர் பி.ஏ; பி.எல்; அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களும், சங்க அலுவலர்களும், புலவர் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். இறை வணக்கம் பாடியபின் உயர்திரு. க. கந்தசாமி அவர்களது நற்பண்புகளையும், பொதுநலப் பணியினை

யும் பாராட்டிப் பலர் பேசினர். திரு. கந்தசாமி அவர்களுக்கு பொன்னுடை போர்த்தினர் திரு. செல்லத்தேவரவர்கள். தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு. க கந்தசாமி அவர்கள் பேசினர்கள்.

இன்றைய கல்வி முறையில் தெய்வ நம்பிக்கை குறைந்து விட்டது. மாணவர்களுக்கு மொழிப்பற்றும், நாட்டுப் பற்று மட்டும் இருந்தால் போதாது. தெய்வப் பற்றும் வேண்டும். மாணவர்கள் பிஞ்சு நெஞ்சிலே தெய்வப்பற்று ஊட்ட வேண்டும். நமது கல்லூரி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்ருர்.

''தேசியம் எனது உடல், தெய்வீகம் எனது உயிர்'' என்று முழக்கமிட்டு வந்த அரசியல் மேதை ஆன்மீக சோதி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனர் அடிச்சுவடு பற்றி நடக்க வேண்டும் என்று விரிவுரையாற்றினர்.

நாட்டுப் பண்ணோடு விழா இனிது முடிவுற்றது.

---

''தெள்ளியரு மாகித் திருவு முடையராய்
வள்ளுவரும் பொய்ப்பவரு மன்னவராய் — வள்ளலாய்
வாழையடி வாழையாய் வந்துதமிழ் காப்பவே
ஏழிசையுங் காக்கு மிவர்''

(செந்தமிழ்)

---

''தமிழ்க் கிளவி'' என்னும் கட்டுரை
அடுத்த இதழில் தொடரும்.

———

# எது இலக்கியம்?

[தமிழ் நாவலர். புலவர். சி. அரசப்பனுர், உறையூர், திருச்சி-3]

இலக்கியமென்ருல் என்ன, என்ற கேள்விக்குப் பதில் காண்போம். உலகில் பல மொழிகள் இருக்கின்றன. சில மொழிகள் பேச மட்டும் முடியும்; எழுத இயலாது ஏன்? எழுத்து இல்லை. சில மொழிகளால் பேசவும் இயலும், எழுதவும் இயலும். ஆனுல் இலக்கிய வளமோ, இலக்கண எல்லையோ மொழிமரபோ இருப்பதில்லை உலகில் சில மொழிகளே இலக்கிய வளமும், இலக்கண வரம்பும், மொழி மரபும் தொன் மையும், தாய்த் தன்மையும், தனித் தன்மையும், உடையன வாக விளங்குகின்றன. அவற்றில் ஒன்று தமிழ்!

இக்காலம் விஞ்ஞானம் வளர்ந்த காலம். எதிலும் புதுமைப் போற்றுங் காலம். உணவில், உணர்ச்சியில், உறை விடத்தில், ஓய்வு நேரப்பொழுது போக்கில் — எவற்றிலும்!

ஆனுல், மொழி இலக்கியம் பழைய ஆராய்ச்சியாக இருந்தாலும் புதுமைப் பொலிவும் அதில் அடங்கியிருக்கிறது. எனவே, அது பற்றிச் சில உரை வரைவாம்:—

மொழி என்பது கருத்தைச் சுமந்து செல்லும் வாகனம். அது முன்பும் இருந்தது; இன்றும் இருக்கின்றது. அதிலும் நம்மொழி பழைய தன்மையும், புதிய தன்மையும், வளரும் தன்மையும், வாழும் தன்மையும் கொண்டது. எனவே, எது இலக்கியம் என்று அறிந்து கொண்டால் அந்த இயல்புகளை யுடைய இலக்கியங்கள் தமிழில் உண்டா? உண்டாயின் அவை யாவை? அவற்றை எவ்விதங் கற்றுப் பயன் பெறலாம். என்பதை அறிந்து நல்வாழ்வு வாழலாம்.

இலக்கியம் என்பது காலக்கண்ணுடி; அக்கண்ணுடி முன் நின்ருல் கடந்த காலம் தெரியும். அன்று உண்ட

உணவும், இருந்த வீடும், உடுத்த உடையும், பாராட்டிய இயல்புகளும். போரிட்ட தன்மையும், அமைதி காத்த இயல்பும் அன்பும், அறிவும், பண்பும், பாங்கும் கண்முன் நிற்கும்.

சிலப்பதிகாரம் ஓர் இலக்கியம். அதைப் படிக்கும் போது படிப்பதைக் கேட்கும்போது தமிழகத்தின் வளமும், வீரமும், கற்பும், செல்வச் செழிப்பும் காணலாம். இளங்கோ வடிகளின் பல்கலை அறிவும், கோவலனின் கலை உள்ளமும், கண்ணகியின் கற்பு மேம்பாடும், மாதவியின் நாட்டியக் கலைச் சிறப்பும், பாண்டியன் நீதியும், சேரன் வீரமும், சோழன் பண்பும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் அறிந்தால்! இப்படியே ஒவ்வொரு சங்க இலக்கியப் பாடல்களைக் கற்றாலும் அந்தச் சொல்லோவியம் தமிழகத்தின் அன்பை, வீரத்தைக் கொடையை எடுத்துக் காட்டும்.

இரண்டாவது; இலக்கியம் என்பது குறிக்கோளு டையது. இலக்கியம் பாடல்களாகவும், உரைநடையாகவும் படைக்கப்படுகின்றது. எனினும், தமிழ் மொழியில் பாடல் இலக்கியங்களே மிகுதி. பாடல்களை இயற்றியவர்கள் புலமை மிக்க புலவர்கள். அவர்கள் அனைவரும் குறிக்கோள் உடைய வர்கள். தமிழகப் புலவர்களின் தலைவர் திருவள்ளுவத்தேவர். அவர் எழுதிய ஒவ்வொரு திருக்குறளும் ஒரு சொல்லோவியம் ஒவ்வொரு சொல்லோவியத்திலும் தமிழ் மக்களின் அறம், பொருள், இன்ப வாழ்வைக் காணலாம். ஒவ்வொரு திருக் குறளிலும் ஒரு தமிழனின் குறிக்கோளைக் காணலாம். பல குறிக்கோள் ஒன்றுபட்டு வாழ்வின் முழுக் குறிக்கோளை நிறை வேற்றுவதாகவும் இருக்கலாம். ஒவ்வொரு குறிக்கோளின் நிறைவைத்தான் தொண்டர் புராணம், தொண்டர் இயல்பைத் தெரிவிக்கின்றது. எல்லோரும் பொதுவாக ஏற்கும் குறிக் கோள்களும் உண்டு. அவை நாடு கடந்து, கடல் கடந்து, மலை கடந்து உலகம் முழுவதும் பரவும் இயல்புடையன. சான்றாக

*"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று"*

என்று திருவள்ளுவர் விளக்குகின்றார். குறிக்கோள் என்பது சிறிய சிறிய குணங்கள் ஒன்றாக இணைந்து உறுதியாகி மிளிர்வது. பெரிய கயிறு, சிறுசிறு இழைகளால் முறுக்கேற்றப் பெற்று வனப்பும் வலுவும் பெறுவது போலக் குறிக்கோளும் உறுதியாகிறது.

பல எண்ணங்கள் அப்போதைக்கப்போது முக்கியமாக தோன்றும், பிறகு சிலமணி, சில நாள், சில தினங்கள், சில ஆண்டு செல்லும்போது பழையனவாய், முக்கியமற்றதாய் எளிதாய் மாறிவிடும். அது குறிக்கோள் அன்று. என்றும் எண்ணப்படுவதாய், சொல்லப்படுவதாய் செய்யப்படுவதாய் இருப்பதே குறிக்கோளாகும் ஒரு சங்கிலியின் உருளைகள் தொடர்பாய் இணைக்கப்படுதல் போலத் தொடர்ந்த நல்ல எண்ணங்கள் தொகுக்கப்படுகின்றன. அப்படி எண்ண அலைகள் மனக்கடலில் ஒவ்வொருவருக்கும் மோதிய வண்ணம் இருக்கின்றன. ஒரே சமயத்தில் இரண்டு மேலான எண்ணங்கள் மோதும்போது எதைச்செய்வது என்ற ஐயம் பிறக்கின்றது அப்போது எப்படி முடிவு செய்வது? தெளிந்த அறிவால் எண்ணித் துணிந்த முடிவால் "இதுவே சிறந்தது" என்று முடிவெடுப்பதே குறிக்கோள் ஆகும். ஆகவே, தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஓரறம் செய்யமுடிந்தால் அது **கொல்லாமை**யே மேலும் ஆற்றல் இருந்து இரண்டாவது அறம் செய்ய இயன்றால் அது **பொய்யாமை**யே என்று தெளிவுபடுத்துகின்றார். இப்படி ஒன்று இரண்டாக அமைத்துக் கொள்ளும் போது அறங்கள் வளரும். நம் வாழ்வே நல்லற வாழ்வாக ஒளிவிடும்.

மூன்றாவதாக நாற்பொருள் கூறுவது இலக்கியமாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் உலகில் நிலைத்த உறுதிப் பொருளாகும். உலகில் காணும் அனைத்தும்

இந்த நான்கு உறுதிப் பொருள்களிலேயே முடிந்து விடும். நான்கையும் கூறுவன சிறந்த இலக்கியங்கள்; மூன்று, இரண்டு, ஒன்று - அவற்றின் சார்பு நிலைகளைக் கூறுவனவும் இலக்கியங்களே! சிற்றிலங்கியங்கள் அவற்றைச் சார்ந்தவை

இனி, நான்காவதாக இலக்கியம் நமக்குப் பாலம் போன்றது இறைவன் பேராற்றல். மனித உயிர் சிற்ருற்றல் உடையது. சிறுமை பெருமையைச் சேரவேண்டும். அழிவது அழியாததைச் சேர வேண்டும். இடையே கடல் அதைக் கடக்கக் கப்பல் அல்லது பாலம் வேண்டும் அப்பாலமே இலக்கியம். பாலத்தை அடைந்தவன் பெருமுயற்சி இன்றி இடைவெளியைக் கடப்பான் அதேபோல் நல்ல இலக்கியம் கற்றவன் வாழ்வுக்கடலை பெரும உலகியல் துன்பத்தைக் கடப்பான். துன்பங்கடக்க எண்சுவை இலக்கியம் பயன்படும். ஒளிவர இருள் நீங்குதல் போல் இலக்கிய இன்பம் பெறப்பெற அறியாமைத் துன்பம் குறையும் விரைவில் நீங்கும் இத்தகைய இலக்கியங்கள் திருவாசகம் போன்றவை

எனவே, இலக்கியம் என்பது காலக்கண்ணுடி, குறிக்கோள் உடையது, நாற்பொருள் கூறுவது, நம்மைக் கரை சேர்க்கும் பாலம் போன்றது. **கலைகள்** மனத்தைச் செழிக்கச் செய்யும்; உணர்ச்சியை வளர்க்கும்; பேருக்கத்தை ஊட்டும்; இன்பம் பெருகச் செய்யும். **அறிவியல்** விஞ்ஞான ஆராய ஆராய அறிவு வளரும்; உண்மை துலங்கும்; நிலைத்த மெய்யறிவின் மேன்மை தெரியும். போலியும், கற்பனையும் விளங்கும்.

ஆனல், இரண்டையும் தருவது இலக்கியம். எளிய இன்ப வழியிலே அறிவை—நல்லறிவைத் தந்துவிடும். அதுவே இலக்கியமாகும்.

---

# "பொய்யா விளக்கம்"

[ப. இராமன், எம்.ஏ., சென்னை.]

**திருக்குறள்:**

பொய்யில் புலவன் 'பொருளுரை' வாழ்க்கை இலக்கிய மாகத் திகழ்கின்றது. அதனாற்றான் நாடு, இனம், மதம், மொழி எனும் எல்லைகளைக் கடந்து மனித இனம் முழுவதும் போற்றும் பொதுமறையாக, அறநூலாகி விளங்குகின்றது. பெரும்பான்மையான உலக மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்த்துள்ளார்கள். மொழி பெயர்ப்பு தொடர்ந்து நடை பெறுகின்றது. மேலைநாட்டுப் புலவர்களின் இலக்கியங்கட்கு எண்ணற்ற திறனாய்வுகள் தோன்றியுள்ளதுபோல் திருக்குற ளுக்கும் திறனாய்வுகள் தோன்றியுள்ளன. 'நவில்தொறும் நூல் நயம் தோன்றி இன்புறுத்தற்குச் செந்நாப் போதார் தந்த அந்தமிலின்பச் செந்தமிழ்ப் பனுவலே தக்க சான்று.

**பொருளிலார்:**

''வாழ்க்கை வாழ்வதற்கே'' என எண்ணும் போது அதனைச் சிறப்புற வாழப் பொருள் உறுதுணையாகின்றது. பொருள் இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள். அவன் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல. வறுமையுற்றவனை உற்றார் உறவினரும் வேண்டார். ''கெட்டார்க்கு நட்டாரோ இல்'' என்பது பழமொழி. இங்ஙனம் யாவரும் வறியவனை வெறுத்து நீக்குதற்கு யாது காரணம்? வறுமையுற்றவனிடம் பெறத்தக்க பொருள் ஒன்று மில்லை. மாறாகப் பொருள் வேறு கொடுத்து உதவவேண்டி யிருக்கும். ஒன்றும் கொடுக்க இயலாதவனை ஒருவரும் வேண்டார். மேலும் பொருள் வேறு கேட்பவனை எவரும் வேண்டார். பொதுவாக எண்ணுமிடத்து உலகம் அவனை வெறுத்து ஒதுக்கி விடுகின்றது. ''இல்லாரை எல்லாரும்

எள்ளுவர்''. தான் பெற்ற பிள்ளையிடம் இயற்கையான அன்பு டைய தாயும் இல்லாளை வேண்டாள் என்றால் உலகம் போற்றுமா? இந்நிலையை உணர்ந்த திருவள்ளுவர் ஒருவன் யாவரும் போற்ற வாழுதல் வேண்டும் என்னும் இன்றியமையா மையைத் தன் வாழ்க்கை இலக்கியத்தில் கலங்கரை விளக்க மாக அமைத்துள்ளார். இதனையே ''பொருள் செயல்வகை'' என்றார்.

**அரசின் கொற்றம்:**

தனிமனிதனின் வெற்றியும் தோல்வியும், ஒரு நாட்டின் வெற்றியும் தோல்வியும் பொருளைச் சார்ந்திருக்கின்றது. உழவர் செல்வத்தைப் பெருக்குவதாலும், ஏனைய தொழில் புரிவோர் பொருளைக் குவிப்பதாலும் அவர்க்கு மட்டுமே ஆக்கம் தேடாமல் அந்நாட் டிற்கும் ஆக்கம் தேடுகின்றார்கள். அந்த ஆக்கமே பேருக்கமும் பெருவலியுமாக அந்நாட்டிற்கு விழுமிய வெற்றியை விளைக்கின்றது

*''பலகுடை நீழலும் தங்குடைக் காண்பர்*
*அலகுடை நீழ லவர்''* *என்ற குறளும்*

*''பொருபடை தருஉம் கொற்றமும்*
*ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே''*
என்ற புறநானூறும் நன்கு காட்டும்.

***சீவகசிந்தாமணி***

சிந்திப்பவருக்கு யாவற்றையும் தரும் சீவகசிந்தாமணி யில் திருத்தக்க தேவர் பொருளின் சிறப்பினை நன்கு விளக்கு கின்றார், சச்சந்தன் என்னும் பேரரசன் அமுதம் போலும் பேரரசி விசயமாதேவியுடன் அந்தப்புரத்தில் காமக்களியாட் டில் அயர்ந்தான். தீயவனான கட்டியங்காரனை நம்பி அரசை அவனிடம் ஒப்புவித்தான். அவனோ சின்னாளில் அரசனைக் கொன்று அரசைத் தனதாக்கினான். மயிற்பொறியில் பறந்து தப்பின அரசி விசயமாதேவி இடுகாட்டில் ஆண்மகவை

ஈன்றாள். அம்மகவைக் கந்துக்கடன் என்ற வணிகன் எடுத்து வளர்த்தான். தாய் தன் சேயைப் பிரிந்து எங்கோ கானகத்தில் சமணத் துறவிகள் வாழும் பள்ளியில் வாழ்ந்தாள். சேய் சீவகன் என்ற பெயரில் வளர்ந்து காளைப் பருவமெய்திப் பல நாடுகளுக்கும் சென்று பல பெண்களை மணக்கும் வாய்ப்பை எய்தினான். இந்நிலையில் கட்டியங்காரனிடமிருந்து தன் அரசை மீட்பதற்கு எண்ணுகின்றான். அவன் தோழர்கள் அவனையும் அவன் தாயையும் ஒன்று சேர்க்கின்றனர். இழந்த அரசைப் பெறத் துடிக்கும் தன் மகனுக்கு மிகச் சிறந்த அரசியலைப் பகர்கின்றாள் அரசி விசயமாதேவி. பொருளின்றிப் பகைவனை வெல்லமுடியாது என மிக்க உறுதியாகக் கூறுகின்றாள். கட்டியங்காரனை வெல்ல முதலில் பொருளைத் தேட வேண்டும், பிறகே துணை வலிமை தேட வேண்டும் என்பதே அவள் கருத்து. ''பொருட் செல்வத்தால் போர்த் தொழில் வல்ல படையைப் பெருக்கலாம். அவ்வலிமை மிக்க படையால் இவ்வுலகை வெல்லலாம். இவ்வுலகை வென்றபின் மேலும் செல்வம் பெருகும். அங்ஙனம் செல்வம் சேர்ந்தால் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடாத பொருள் இவ்வுலகில் இல்லை.'' என்றாள்.

*''பொன்னி னாகும் பொருபடை அப்படை*
*தன்னி னாகும் தரணி தரணியிற்*
*பின்ன தாகும் பெரும்பொருள் அப்பொருள்*
*துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே''*

(*சீவகசிந்தாமணி*)

***யானைப்போர்*** :

பொருகளத்தில் கொல்களிறுகள் பொருகின்றன. மருப்பொடு மருப்பு எதிர் குத்துகின்றன. யானைகள் மடிந்து வீழ்தலும், வீரர்கள் இறந்து போதலும், குருதியாறு பரந்து பெருவெள்ளமாக ஓடுதலும் பொருகளத்தில் காண்போர்க்கு அச்சந்தரும் காட்சிகள். போரில் ஈடுபட்ட வீரர்க்கு அச்சமும்

துன்பமும் இருக்கலாம், இப்பொருகளக் காட்சியை ஒரு குன்றின் உச்சியிலிருந்து பார்க்கின்றவர்கட்கு அச்சமேது? துன்பமேது? மிக்க இன்பமாகக் கண்டு களிக்கலாம். அங்ஙனமே ஒரு வினையைச் செய்து முடிக்க விரும்புகின்றவன் பெருஞ் செல்வம் பெற்றிருப்பானுயின் பிறரை ஏவி அவ் வினையை எளிதில் முடித்து அந்த வினையில் வரும் அச்சமும் துன்பமும் இன்றி இனிதே இருக்கலாம். இதனையே 'குன்றேறி யானைப்போர் கண்டற்று' எனச் சிறந்த உவமையால் விளக்கி னுர் வள்ளுவப் பெருந்தகை.

***செல்வச்செவிலி:***

அன்பு என்பது ஒருவனுடைய மனைவி, மக்கள், தாய், தந்தை, சுற்றம் என்னும் நெருங்கிய தொடர்புடையாரிடத்துக் காட்டும் மனநேயம், இந்த எல்லையைக் கடந்து உலகமக்கள் அனைவரிடத்தும், உயிர்களனைத்திடத்தும் காட்டப் பெறுவது பேரன்பு எனப்பெறும். இதனையே அருள் என்பர். அருள் என்பது அன்பின் முயற்சியே. அன்பிலிருந்து அருள் பிறக் கின்றது. "அருளென்னும் அன்பின குழவி" என்றுர் பெரு நாவலர் அருளென்னும் குழந்தையை வளர்க்க ஒரு செவிலி வேண்டும். உலக உயிர்களின் துன்பம் துடைப்பதே அருட் செயல். பொருளின்றித் துன்பம் துடைப்பதே அருட் செயல். பொருளின்றித் துன்பம் துடைத்தல்நடவாது. ஆகையால் அருளின் ஈன்ற தாய் அன்பாக இருந்தால் அதனை வளர்க்கும் செவிலித்தாயாகச் செல்வம் விளங்குகின்ற தென பொருட் செறிவோடு புகன்றுர். ஏனைய செவிலி யர் நற்றுயிடம் உதவியை எதிர்பார்ப்பாள் செல்வச் செவிலியோ உதவி நாடாது தன்னைச் சார்ந்தார்க்கு எல்லா உதவியும் செய்வாள். இதனுல் உலக உயிர்களிடத்தில் அருள்கொண்டு துன்பம் துடைக்க விரும்புவோர்க்கும் பொருட் செல்வமே துணையாகின்றது என்பது கண்கூடு. உலக நாடுகளிலுள்ள சான்றோர்களும், அறநிலையங்களும்

மக்கள் தொண்டுபுரிய பெருஞ் செல்வத்தைத் திரட்டுவதை நாம் இன்றும் காண்கின்ரேும்.

**செருநர் செருக்கறுக்கும்:**

*"எட்டி எட்டுமட்டும் பாயும்*
*பணம் பாதாள மட்டும் பாயும்"*

என்பது தமிழர் பழமொழி. கூரிய ஆயுதத்தைக் காட்டிலும் வலிமையுடையது 'பணம்' என்பது இதனுல் விளங்கும். செல்வம் பெருகிய பொழுது அவனுக்கு நண்பரும் சுற்றத்தாரும் பெருகுவர். தனது வலியும் துணேவலியும் பெருகும். பகைவர் செருக்கொழிவர். தனது பகைவனே நேரில் கண்ட போது மட்டும் தாக்க வல்ல ஆயுதத்தைவிட நேரில் காணுத போதும் இவன் செல்வப் பெருமையால் பகைவர் செருக்கொழிந்து தாழ்ந்து நிற்பர் என்ருல் கூரிய படையினும் செல்வமே வலிமைமிக்கதன்ரேு? செல்வம் காணப்படாத அருவப்பொருளேயும் சென்று தாக்கவல்லதெனின் அதன் வலிமையை என்னென்பது?

**நந்தாவிளக்கு:**

ஒரு கை விளக்கு எடுத்துச் செல்லுமிடத்தில் இருளே நீக்கும். எடுத்துச் செல்லப்படாத இடங்களில் இருளே நீக்கும் ஆற்றல் அதற்கு இல்லே. ஆனுல் பொருள் எனும் பொய்யா விளக்கு எடுத்துச் செல்லப்படாத இடங்களிலும் சென்று இருளகற்றி ஒளி வீசும். தூண்டப்பெறும் உதவி தேவை இல்லே. தானே என்றும் மங்காது ஒளி வீசும். இதுவே பொய்யா விளக்கு எனும் நந்தாவிளக்கு. இச்சிறந்த விளக்கு செல்வமன்றி வேறென்றில்லே. ஒருவன் பகையை ஒழிக்க இதனினும் வேறு துணே வேண்டுவதில்லே. அவன் மனத்தின் கண் நினேத்த இடத்திலுள்ள பகைவர் என்னும் இருளேச் செல்வம் எனும் நந்தாவிளக்குத் தானே சென்றெுழிக்கும். இருந்த இடத்திலிருந்தவாறே செலுத்தப்பெறும் ஏவுகணேகள் குறித்த இடத்தில் சென்று தாக்கினுலும் கருதிய வினேயை

முடிக்க இயலாமல் போகலாம். ஆனால் பொருள் எனும் பொய்யா விளக்கோ கருதிய வினையை முடிக்கும் ஆற்றல் மிக்கது. அதனாற்றான் ''பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று'' என்றார் முதற் பாவலர்.

***பொருளாகச் செய்யும்:***

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேற்றுமை மக்களுக்கும் விலங்குகட்கும் உள்ள வேற்றுமையைப் போன்றது எனத் திருவள்ளுவர் கல்லாதாரைச் சாடுகின்றார். கல்வி மட்டுமின்றி ஏனைய பண்புகளும் இல்லாத பூரியரையும் ஒரு பொருட்டாகி மதிக்காதவரை, பகைவர், அயலார், நண்பர் அனைவரும் மதிக்கத்தக்க பெருமையைத் தருவது பொருட் செல்வமே. ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்'' என்று நயம்பட உரைத்தார் பெருநாவலர்.

***பொருளீட்டல்:***

செல்வத்தின் வலிமையையும் பயனையும் அறிந்த மக்கள் பெருஞ் செல்வத்தைத் தீய வழியில் தொகுக்க முயலுதல் கூடும். இன்றைய உலகில் இஃதே இயற்கையாகி விட்டது. தீய தழியில் வந்த பொருள் அதுவும் அழிந்து அதனைத் தேடியவனையும் அழிக்கும். பச்சை மண் குடத்தில் நீர் பெய்து வைத்தால் அந்த நீர் குடத்தையும் உடைத்துத் தானும் பாழாக நிலத்தில் ஓடிவிடும், தீய வழியில் பொருளீட்டல் ''பசுமண் கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று'' என்றார் தேவர். அறவழியில் பொருளீட்டல், அன்பு, அருள் ஆகிய பண்புகளை மேற்கொண்டு பொருளீட்டலாம். அங்ஙனம் ஈட்டினால் தனக்கும தன் சந்ததியார்க்கும் பயன்படும். ஒருவனுக்கு அறவழியில் வந்த பொருள் நிலையான ஒளியூட்டும் நந்தா விளக்கு எனின் எல்லா இருளையும் அறுக்கும் அவ்விளக்கையே நாடுவோமாக.

---

# தமிழ்மொழி வரலாறு

சு. சக்திவேல் M.A., M.A.,

மானிடவியல் ஆராய்ச்சித்துறை, கல்கத்தா-13.

&

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழ்மொழி சீனம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளை ஒப்பத்தொன்மை வாய்ந்திருப்பதோடு, பண்டை இலக்கிய இலக்கணச் செல்வங்களையும் கொண்டிலங்குகிறது. மொழியியல் பேரறிஞர் கிரியர்சன், "திராவிட மொழிகளுள் தமிழ்மொழியே அளவிடவொன்றுப் பண்டைக் காலம் முதல் பயின்று வருவது", என்கிறுர். வடமொழி அறிஞர் இராமசாமி சாத்திரியாரும், "உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கியம் தொன்மையுடையதொன்ருக இருப்பதோடு அல்லாமல் தலைசிறந்த உலக இலக்கியங்களில் ஒன்ருகத் திகழ்கிறது". எனக் குறிப்பிட்டுள்ளார்கள். பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் விளங்குவது நமது தமிழ்மொழியேயாகும் மொழி வளர்வது, பரிணும வளர்ச்சியாலும் (evolution) கடன் வாங்கலாலும் என்பர். தமிழ் மெழியின் வரலாற்றை இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, பேச்சுமொழி ஆகியவற்ருல் அறியலாம். தமிழ் மொழியின் வரலாற்று ஒலியியல் அடிப்படையில்(Phonology...) இங்கு ஆராயப்படுகிறது.

இன்றுள்ள தமிழ் நூற்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம். கிரேக்கர் முதலானேர் இந்தியாவைப் பற்றி எழுதிய குறிப்புக்களில் தமிழ்ப்பெயர்களைக் கான்கிரேம். கி.மு. 2, 3ஆம் நூற்ருண்டு என்று கருதப்படும் பிராமி கல்வெட்டுக்கள் தமிழ் மொழியில் இருக்கக் கான்கிரேம். பல புலவர்களால் பாடப்பெற்ற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு முதலிய தொன்மையான தமிழ் இலக்கணங்களாகும்.

மிகப் பழமையான தொல்காப்பியத்திலும் இடைச்செருகல் உண்டென்பர். அண்மையில் ஆராயப்பட்ட கல்வெட்டுக்கள், சங்ககால இலக்கிய மொழியமைப்பு முதலியவற்றை நோக்கும் போழ்து சங்க கால இலக்கியங்கள் கி. பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகயிருக்க வேண்டும். இருண்ட காலமான களப்பிரர் ஆட்சி காலத்திலும் சில இலக்கியங்கள் தோன்றின. கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் தொடர்ச்சியான இலக்கிய வரலாறும் மொழி வரலாறும் நமக்குக் கிடைக்கிறது. இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உலகம் போற்றும் திருக்குறளும் சமய காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களாகும். நாயன்மார்கள், ஆழ்வார்கள் கால இலக்கியங்களைச் சமயகால இலக்கியங்கள் என்று கூறுவர். பல்லவர்கால மொழி வரலாற்றையறிய நிறைய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. நாயன்மார், ஆழ்வார்களின் பக்திப் பாடல்களிலிருந்தும் கம்பர், ஒட்டக்கூத்தர் போன்ற புலவர்களின் நூற்களிலிருந்தும் இடைக்காலத் தமிழ் வரலாற்றை அறிகிறோம்.

தமிழ் மொழியின் வரலாற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சங்க காலத்திற்கு முற்பட்ட பகுதி

   [(தொல்காப்பியக் குகைக் கல்வெட்டுக்களும்)
   (Cave Inscriptions...) இவற்றில் அடங்கும்)]

2. சங்க காலம்

   (எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் இவற்றில் அடங்கும்)

3. சங்க காலத்திற்குப் பிற்பட்ட பகுதி

   (திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை)

4. சமய காலம்

(நாயன்மார்களும் ஆழ்வார்களும் இயற்றிய சைவ வைணவ இலக்கியங்களும் கல்வெட்டுக்களும்)

5. சோழர் காலம்

(சீவக சிந்தாமணி, பெருங்கதை, இராமாயணம் மற்றும் சோழர் காலக் கல்வெட்டுக்கள்)

6. நாயக்கர் காலம்

7. தற்காலம் (முற்பட்ட பகுதி)

(சிற்றிலக்கியங்கள் - மடங்களின் தொண்டு)

8. தற்காலம் (பிற்பட்ட பகுதி)

(போர்த்துக்கீசியர், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர் ஆதிக்கத்தால் ஏற்பட்ட மொழி வளர்ச்சி-20-ஆம் நூற்றுண்டு-கிளை மொழி ஆராய்ச்சி Dialect Survey ) முதலியன).

தமிழ் மொழியின் வரலாற்றைப் பழந்தமிழ் (Old Tamil) இடைக்காலத் தமிழ் (Middle Tamil) தற்காலத் தமிழ் (Modern Tamil) என மூன்று பெரும் பிரிவுகளாகவும் பிரிக்கின்றனர். மேலும் பழந்தமிழையே முன்னைய பழந்தமிழ் (early old Tamil) மத்திய பழந்தமிழ் (middle old Tamil) பின்னைய பழந்தமிழ் (late old Tamil) என முப்பிரிவாகவும் பிரிக்கின்றனர்.

அ, இ, உ, எ, ஒ, என்ற ஐந்து குறிலும் அவற்றிற்கின மான நெடிலும் பழைய தமிழ் உயிர் ஒலியன்களாகும் (Vowel Phonemes) தொல் திராவிடத்திலும் (Proto-Dravidian...) இவ்வைந்து உயிர்க்கும் அவற்றிற்கினமான நெடிலும் உள்ளது. தமிழில் இன்று ஆறு வல்லெழுத்துக்கள் இருப்பினும், க, ப, த தான் மிகப் பழைய ஒலிகளாகக் கருதப்படுகிறது. மேலும் எல்லாத் திரராவிட மொழிகளிலும் ‘ச’ கரம் இருந்தால், அது

பழைய ஒலியேயாம். பழந்தமிழில் ' து ' என்பது தனி ஒலியன் (Phoneme) என்று கருதுவதற்கில்லை. இது மொழியிடையில் மட்டும வரும். ஞ, த, ம, மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் வரும். வல்லெழுத்துக்கள் ஒலிப்பில்லா ஒலி (Voiceless) யாகவே இருந்தன. 'ச' கரம் மொழிக்கு முதலில் வந்த போழ்து அது கெட்டது என்பர். எடுத்துக்காட்டாக, தென்திராவிட மொழியான தோடாவில் தொல்திராவிட 'ச'கரம் 'த'கரமாக மாறியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் காலத்தில் ஆய்தம் பெருவழக்காகிவிட்டது. தொல்காப்பியத்தை ஆராயும்பொழுது, 'ன' 'ந' 'ஞ' முதலியன ஒலியன்களாக (Phoneme) உள்ளன. 'ற' வல்லினமாகவே ஒலிக்கப்படுகிறது. நிகழ்கால இடைநிலை விகுதி பற்றி சான்று இல்லை. உளப்பாட்டுத் தன்மை, பன்மை வேறுபாடு காணப் படுகின்றது. மேலும் தொல்காப்பிய நூற்பாக்களில் 'என்மனார்', 'என்ப' எனச் சுட்டுதலால் அவருக்கு முன்னும் இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியுள்ளது.

'ஆ, ஏ, ஓ அம் மூன்றும் வினா', (தொல்–32) பழந்தமிழ் இலக்கியத்திலும் இடைக்கால இலக்கியத்திலும் சான்று இல்லை. ஆனால், திராவிட மொழிகளான தோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கோலாமி போன்ற திராவிட மொழிகளில் 'ஆ'காரம் காணப்படுவதால் தொல்திராவிடத்திலும் அஃது இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியமான தொகையும பாட்டும் தொல்காப்பியத்திற்குப் பிந்தியதால் அவற்றில் மொழிப் பண்பு ஓரளவு மாறியிருப்பது இயல்பே. ஆனால், தொல்காப்பிய இலக்கணமும் சங்க இலக்கியமும் பல பண்பு களில் ஒத்துள்ளன. 'ர'கரமும் 'ழ'கரமும் குறில் கீழ் ஒற்றாக வராது (தொல். 49). 'ஞ'கரம் 'ஒ'கரத்தோடு மெய்யோடு மொழிக்கு முதலில் வரும் (ஞொன்கி, அகம் 312) எண்ணுப் பெயர். 'அன்'சாரியை ஏற்கும் என்பது தொல் திராவிடத்

திற்கும் பொருந்தும். திராவிட மொழிகட்கே உரித்தான 'ச'கர முதன் மொழிச் சொற்களும் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன; (சவட்டு, அகம் 37, 5. 14) சண்பகம் (குறுந். 75) சந்தனம் (அகம். 23,4) ஞகர முதன்மொழிச் சொற்களும் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன (ஞமலி, அகம். 122,9, புறம், 74. 3) நான்கு என்ற எண்ணைக் குறிக்கும் தொல் திரா விடச் சொல் ''நால்கு'' பத்துப்பாட்டில் வந்துள்ளது. 'ல'கர 'ண'கர மாற்றம் தமிழ் மலையாளம், தோடா, கோத்தா மொழிகட்குரிய மாற்றமாகும்.

சங்க இலக்கியம் என்று சிறப்பாகக் குறிக்கப் பெறு வன எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமேயாகும். மொழி வரலாற்றில் பழந்தமிழ் (Old Tamil) என்று இக்கால எல்லை யைக் குறிப்பிடுவது உண்டு. இவற்றோடு காலத்தால் முந்திய தொல்காப்பியமும் காலத்தால் பிந்திய சிலம்பு, மணிமேகலை, குறள், முதலியனவும் இவற்றுள் அடங்கும்.

சங்க காலத்தில் சமக்கிருதம், பிராகிருதம், பாலி சொற்கள் தமிழ் மொழியில் கலந்தன. சங்ககால மொழியமைப் பில் 'ன'கர 'ள'கர வேற்றுமை உண்டு. (மனம் அகம், மனம் குறுந் ) 'ந'கரமும் 'ன'கரமும் பழந்தமிழில் தனித்தனி ஒலியன் (Phone) களாகும். (வெற்றி தோல். 300, அகம். 37 10, வரில் பதிற்று. 4.10, சிலம்பு 2.3) நிகழ்கால இடைநிலை 'கின்று' 'கிறு' மிகவும் குறைவாகவே பயின்று வருகின்றன. பழந்தமி ழில் உறழ்ச்சி (Free variation) அதிகமாகவே உள்ளது [அறம்- அறன், நிறம்-நிறன்,] எதிர்கால விகுதியாக 'கு'கரமும் 'வ' கரமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (செய்குவேன், புறம் 304, கான்குவம் (ஐங 112). முன்னிலைப் பன்மைப் பெயராக 'நீயிர்' 'நீர்' என்ற வடிவங்களே உள்ளன. 'நீமும்' 'நீங்களும்' இடைக் காலத்தில் வந்தனவாகும். 'யான்,' நான்' என மாறியுள்ளது. எண்ணுப்பெயர் 'அன்'சாரியை இன்றி வந்துள்ளது. பலர்பால் விகுதியான 'ர'கரத்தின் பின் 'கள்' விகுதி சேர்க்கப்பட்டுள்

ளது [அரசர்கள், சிறுமியர்கள் முதலியன] 'ய' கரத்தின் பின் வரும் 'தகரம்' 'ச'கரமாக மாறியுள்ளது (Palatalization...)

ஆய்த்தி > ஆயச்சி

முன்னிலைப் பன்மையைக் குறிக்கும் 'நீம்' சீவகசிந்தாமணியில் வந்திருப்பினும், அஃது பழங்காலத்தில் பேச்சு வழக்கில் இருந்திருக்க வேண்டும். 'கின்று'' போன்ற நிகழ்கால இடைநிலைகள் அகநானூறு, பரிபாடல், முதலியவற்றில் காணப்படுகின்றன. 'அன்' ஆண் பால் விகுதியாக தொல்திராவிடத்தில் காணப் படுவது போன்று, பழந்தமிழிலும் உள்ளது மொழிக்கு இடையில் வரும் 'ய'கரம் 'ச'கரமாக மாறும் என்பர் ஒப்பிலக்கணத்தார். 'உசிர்' (உயிர்) போன்ற சொற்களும் இடைக்கால நூற்களில் காணப்படுகிறன, விகுதியில் வரும 'எ'கரம் 'அ'கரமாதிரியத் தொடங்கியது. (வந்தனெள்-வந்தனள்).

சங்க காலத்தை யடுத்த இலக்கிய நூற்களில் சமக்கிருதம், பிராகிருத, பாலி சொற்கள் நிறையத் தமிழில் வந்து கலந்து விட்டன. 'ந'வுக்கும் 'ன'வுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விட்டது. நிகழ்கால இடைநிலையான கின்று, கிறு அதிக அளவில் பயின்று வந்துள்ளன.

பல்லவர் காலத்தில் மதங்களுக்கிடையே எழுந்த போராட்டங்களின் விளைவாக மணிப்பிரவாள நடைக்கு வித்து ஊன்றப்பெற்று சோழர் காலத்தில் அஃது தழைத்தோங்கியது. இதனால் தமிழில் வடசொற்கள் நிறையப் புகுந்தன. பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் ஆழ்வார் நாயன்மார் பாக்களிலும் புகுந்தன. இக்காலத்தில் பலவண்ணச் சாயல் பெறுதல் (Palatalization) அதிகமாக உள்ளது. இக்காலத்தில் 'ர'வுக்கும் 'ற'வுக்கும், 'ழ'வுக்கும் 'ல'வுக்கும் உறழ்ச்சியைக் காண்கிறோம் இன்-இல் ஆக மாறுதலைக் (ஏழாம் வேற்றுமை) காண்கிறோம். 'ந'கரம் 'ஞ'கரமாகும் வழக்குப் பெருகிற்று, வட

மொழிச் செல்வாக்கால் டகரம் நாமடி (retroflex) எழுத்தா யிற்று பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் 'ற'கரத்திற்கும் 'ர'கரத்திற்கும் உறழ்சி (Freevariation) காணப்படுகிறது. 'ந'கரமும் 'ன'கரமும் ஒன்ருயிற்று எனக் கூறலாம். மொழியின் இடையிலும் கடையிலும் வருவதனை 'ன'கரம் என்றும் மொழி முதலில் வருவதனை 'நகரம் என்றும் வேறுபடுத்தினர். இக்காலத்தில் பெரும்பாலான சொற்கள் உகரச்சாரியை பெற்று வந்தன (மண்ணு).

சோழர் காலத்தில் சமக்கிருத குழிந்துரசொலிகளும் (Sibilants) பிளந்துரசொலிகளும் (fricatives) ஒலிப்புடை ஒலிகளும் (voiced) தமிழில் இடம் பெற்றன. தற்பவத்தைக் காட்டிலும் தற்சமம்தான் அதிகமாக உள்ளது. ஒலிப்பில்லா, ஒலிப்புடை மெய்யொலிகளின் வேற்றுமை நிலைபெறத் தொடங்கியது மேலும் இக்காலத்தில் பிராகிருத வழக்குக் கொஞ்சம் குறைந்து சமக்கிருத வழக்கே மேலோங்கியது முதலாவதாக மெய்யொலிகள் மொழிக்கு முதலாதலைக் காண்கிருேம். 'ந'கரம் 'ஞ'கரமாகும் வழக்கு அருகியது எனலாம். ஞாயிறு > நாயிறு என வழங்கத் தலைப்பட்டது. 'ழ'கரம் 'ள'கரமாக ஒலித்தல் பெருவழக்காகப் பெருகிவிட்டது. 'ட' 'ற' மாருட்டமும் நிலைபெறத் தொடங்கி விட்டது வடமொழிச் சொற்கள் தமிழில் புகும்போது ஏற்படும் மாற்றங்களை நன்னூலார் குறிப்பிட்டுச் செல்கிருர். மொழிக்கு முதலாகாத மெய், உயிர் எழுத்து ஒன்றினைப் பெற்று வரும் (ராமன் > இராமன்). சோழர் காலத்திலேயே மெல்லினத்திற்குப் பின்னும் உயிரெழுத்துக்களுக்கிடையிலும் வரும் வல்லெழுத்து ஒலிப்புடை ஒலியாக (Voiced) மாறியதெனலாம். வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும்போது ஷ, க்ஷ, 'ச' வாக வழங்குவதைக் காண்கிருேம் 'ர'கர 'ற'கர வேற்றுமை இலலையென்றே கூறலரம். சோழர் கால கல்வெட்டுக்களில் இவ்வேற்றுமையைக் காண்பது அரிது. 'இ'கரம்

'உ'கரமாக மாறியதையும், 'ஐ'காரம் 'அ'கரமாகவும் இகரமாகவும் மாறத் தலைப்பட்டதையும் சோழர்கால இலக்கியங்கள் மூலம் அறிகிறோம.

முஸ்லீம் ஆதிக்கத்தில் அராபி, பெர்சியன், உருது வார்த்தைகள் நிறையத் தமிழில் கலந்தன. இவற்றின் விளைவாக Z, F, ஷ ஸ போன்ற ஒலிகள் தமிழில் புகுந்தன மயங்காத எழுத்துக்கள் மயங்குகின்றன! மொழிக்கு முதலாகாத எழுத்துக்கள் முதலாகின்றன (டம்பம், டமாரம்) ஈறாகாத எழுத்துக்கள் ஈறாகின்றன. (கோர்ட்) இதனைத் தொடர்ந்து. போர்த்துக்கீசு, டச்சு, பிரெஞ்சு, ஆங்கில மொழிகளின் செல்வாக்கால் தமிழ்மொழி பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்தது என்று கூறலாம். வீரமா முனிவர் காலத்திற்குள் ஒலிப்பிலா ஒலி, ஒலிப்புடைய ஒலி என்ற வேறுபாடு நிலைபெற்று விட்டது. இன்று தமிழை எழுதப் பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் கிரந்தத்தினின்றும் வளர்ந்து, பல்லவ, சோழ காலத்தில் சில மாற்றங்களுக்குள் இன்றைய வடிவத்தைப் பெற்றன. இன்றைய தமிழில் ஒலிப்பிலா, ஒலிப்புடை வல்லெழுத்துக்கள், தனி ஒலியன்களாகும். ஆனால், இத்தகைய வளர்ச்சியை கிராமப்புற மக்களின் பேச்சில் காண்பது அரிதாகும். கமில் சுவலபில் (Kamil Zvelebil) போன்றோர் மெய்யொலிகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றனர். இக்காலத் தமிழில் மூக்கின் உயிர் (Nasal Vowel) வளர்ச்சி பெற்றது குறிப்பிடத்தக்க தொன்றாகும். தொல்காப்பியர் காலத்திலேயே இதற்குரிய வித்து விதைக்கப் பட்டிருக்கின்றது. பேச்சு வழக்கில் மொழியீற்று. ம, ன, ள, ல போன்றவை கெடும்போழ்து, அதனையடுத்த உயிர் மூக்கொலி பெறுகிறது.

| | |
|---|---|
| maram > $\tilde{\text{mara}}$ | 'tree' |
| $\tilde{\text{ava}}$ | 'He' |
| ɛva | 'She' |

Vande 'I came'

vande 'You came'

தொல்காப்பியரே தமிழ்நாட்டைப் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்து, அவற்றில் வழங்கும் கிளைமொழிகளைப் (dialects) பற்றி குறிப்பிட்டுச் செல்கிறார், திசைச் சொல்லுக்கு இலக்கணமும் வகுத்துள்ளார். வீரசோழியமும் மூன்று கிளைமொழிகளைப் பற்றிப் பேசுகிறது. கொங்குநாட்டுத் தமிழில் 'ழ'கரம் 'ள'கரமாக (நாழி > நாளி, உழக்கு > உளக்கு) ஒலிக்கப்படுவதையும் சோழ நாட்டில் 'ள'கரம் 'ழ'கரமாக ஒலிக்கப்படுவதையும் (விளக்கு, > விழக்கு, இளமை > இழமை) காண்கிறோம். தமிழகத்தில் பல கிளைமொழிகள் உள்ளன. பேச்சுத்தமிழ் தமிழகம் முழுதும் ஒரே மாதிரியாக இல்லை. நாஞ்சில் நாட்டில் பேசும் தமிழுக்கும் சென்னையில் பேசும் தமிழுக்கும் வேறுபாடு உண்டு. குறிப்பிட்ட ஒரு சமூகக்குழு தனக்குள் ஒத்துழைப்பதற்கு என்று ஏற்பட்ட மரபுவழிப்பட்ட பேச்சொலிக்குறியீடே மொழியாகும். தனிப்பட்ட ஆள் பேசும் பேச்சினை தனியார் பேச்சு (idiolect) என்று குறிப்பிடுவதுண்டு. கிளைமொழி என்பது ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் அளவில் வேறுபாடு அற்று இருப்பதாகும். ஒரு கிளைமொழிக்குள்ளேயே அந்தந்த சாதிப்பிரிவினர்க்கேற்ப உட்கிளைமொழிகளும் உண்டு. அந்தந்த சாதியினர் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பொழுது இக்கிளைமொழியைப் (Social dialect...) பயன்படுத்துவர். இச்சாதிப் பேச்சுத் தமிழையும் அடக்கி அப்பகுதியில் பேசுகின்ற பேச்சினை இடப்பேச்சு மொழி (Regional dialect...) என்று கூறுவர். நாஞ்சில் நாட்டுத் தமிழ், கோயம்புத்தூர் பேச்சுத்தமிழ், சென்னை பேச்சுத்தமிழ், எனப் பலவாறாக இருப்பினும், படித்த நாஞ்சில் நாட்டாரும் படித்த சென்னையில் உள்ள ஒருவரும் தங்களுக்குள் பேசிப் புரிந்து கொள்கின்றனர். இந்த வட்டாரப் பேச்சுத் தமிழையும் அடக்கி பொதுப் பேச்சுத் தமிழாக அஃது திகழ்கிறது. பொதுப் பேச்சுத்தமிழ், இலக்கியத் தமிழில் அடங்காது. ஆனால், ஒன்றுக்கொன்று தொடர்புண்டு என்பதை கீழ்வரும் படம் நன்கு விளக்குகிறது.




இங்கே குறிப்பிட்டுள்ள இலக்கியத் தமிழ் எழுதுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் பேசப்படும் பல்வேறு கிளைமொழிகளுக்கிடையே (dialects) உள்ள உறவையும் நெருக்கத்தையும் இப்படம் நன்கு விளக்குகிறது.




தமிழ் நாட்டில் பேசப்படும் பேச்சு மொழியை ஒலியடிப்படையிலும் பேச்சுமொழி எல்லைக் கோட்டின் (isogloss) படியும் பல்வேறு பிரிவாகப் பிரிக்கலாம்.

### 1. நாஞ்சில் நாட்டுப் பேச்சுத்தமிழ்:

இப்பேச்சுத் தமிழில் 'ற'கரம் ஒலியனுகக் காணப் படுகிறது. இப்பேச்சுத்தமிழ் தமிழ் நாட்டில் பேசப்படும் மற்ற பேச்சுக்களினின்றும் சிறிது வேறுபட்டது. இலங் கையில் பேசப்படும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் இப்பேச்சுத் தமிழுக்கும் ஓரளவு ஒலியியல், இலக்கண அமைப்பில் நெருக்கம் உண்டு.

| | |
|---|---|
| ஆச்சே | 'தினம்' |
| ஆச்சி | 'பாட்டி' |
| செம்மான் | 'சக்கிலியன்' |

நாஞ்சில் நாட்டுப் பகுதியை மூலவிடம் (Focal area) என்பர். மொழியில் தோன்றும் மாற்றம் எங்காவது ஓர் இடத்தில் கிளைத்திருக்க வேண்டும். வேறுபாடு தோன்றும் அவ்விடத் தைத்தான் மூலவிடம் என்பர் கிளைமொழியாராய்ச்சியாளர். (Dialectologist...). இப்பேச்சுத் தமிழில் 'ற', 'ங' இவ்விரண் டும் ஒலியன்களாகும்,

### வடக்கத்திய பேச்சுத் தமிழ்:

(செங்கல்பட்டு, சென்னை, வட ஆற்காடு) இப்பேச்சுத் தமிழில் 'ழ'கரம் 'ய'கரமாக ஒலிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பழம் | > | பயம் | 'பழம்' |
| கிழவன் | > | கெயவன் | |
| கிழவி | > | கெயவி | |
| இழு | > | இசு | |

'ழ'கரம் 'ச'கரமாகவும் ஒலிக்கப்படுகிறது. மேலும் வடாற்காடு மாவட்டத் தலைநகரமான வேலூரில் 'இருக்கிறது' என்பதை இருக்'கீது' என்றே கூறுகிறுர்கள். முஸ்லீம்களின் செல்வாக் குக் காரணமாக இவ்வாறு வழங்கப்படுகிறது. 'அவர்கள்' என்பது 'அவுங்க' என்றே வழங்கப்படுகிறது.

**தெற்கத்திய பேச்சுத் தமிழ்**: (மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம்)

தென் மாவட்டங்களில் 'ழ'கரத்தை 'ள'கரமாகவே உச்சரிக்கின்றனர்.

பழம் > பளம்

'அவர்கள்' என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் 'அவிய' என்றே வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 'சாமான்' என்பதை 'ஜாமான்' என்றே உச்சரிக்கின்றனர். இராமநாத புரத்திலுள்ள செட்டிநாட்டுப் பகுதியில் 'பந்தல்' என்றால், இறந்தவர்கட்கு போடப்படும் பந்தலைத்தான் குறிப்பிடுகிறார் கள். இப்படிப்பட்ட வழக்கைக்கொண்டு பேச்சுமொழி எல் லைக் கோட்டால் (isoglosses...) அஃது வேறு பகுதியினின்றும் வேறுபடுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 'அண்ணாச்சி' என்பது அழைக்கும் சொல்லாக வழங்கப்படுகிறது.

***கிழக்கத்திய பேச்சுத்தமிழ்***: (திருச்சி, தஞ்சாவூர் தென் ஆற்காட்டின் ஒரு பகுதி):

தஞ்சாவூர் பேச்சுத்தமிழில் 'எண்பது' என்பதை 'எம்பளது' என்று கூறுகின்றனர். இப்பகுதியில்தான் 'ழ'க ரத்தை 'ழ'கரமாகவே உச்சரிக்கின்றனர்.

| | |
|---|---|
| இம்மாம் | இந்த அளவு |
| ஆத்தா | அம்மா |
| மல்லாட்டே | கடலை |

தென்ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் பகுதியில் 'திருவிழா'வை 'திருவிஷா' என்றே வழங்கப்படுகிறது. 'ழ'கரம் 'ஷ'கரமாக உச்சரிக்கப்படுகின்றது.

**மேற்கத்திய பேச்சுத்தமிழ்** :

கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, மாவட்டங்களில் பேசப்படும் பேச்சுத்தமிழில் 'ழ'கரம் 'ள'கரமாகவே உச்சரிக் கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| உழக்கு | > | உளக்கு |
| கோழி | > | கோளி |

'அவர்கள்' என்பதற்கு 'அவிய' என்றே வழங்கப்படுகிறது. இப்பேச்சுத்தமிழில் 'ஞ' வுக்கும் 'ந'வுக்கும் அதிக வேறுபாடில்லை, ஈரோட்டுப் பகுதியில் 'ல'கரம் 'ள'கரம் இரண்டும் ஒன்ருகவே உச்சரிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| அப்ளே | 'அப்பொழுது' |
| இப்ளே | 'இப்பொழுது' |
| எப்ளே | 'எப்பொழுது' |
| புள்ளே | 'பெண்' |
| ஆரியம் | 'கேப்பை' |
| கன்ஞலம் | 'கல்யாணம்' |

மேலும் பெங்களூரில் பேசும் பேச்சுத்தமிழில் கன்னட மொழியின் செல்வாக்கையும் ஆந்திராவிலுள்ள ஹைதராபாத்தில் பேசப்படும் தமிழில் உருது, தெலுங்கு மொழிகளின் செல்வாக்கினையும் திருவனந்தபுரம், பாலக்காடு ஆகியவிடங்களில் பேசப்படும் தமிழில் மலையாள மொழியின் செல்வாக்கையும் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத் தமிழில் சிங்கள மொழியின் செல்வாக்கையும் காணலாம். பேச்சு மொழியை ஆராயும்பொழுது பொதுமொழியை மிகக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

இவற்றினின்றும் தொல்காப்கிய காலத்திலிருந்து இன்றுவரை தமிழ்மொழி அடைந்த வளர்ச்சியை ஒலியியல் அடிப்படையில் ஓராற்ருன் அறியலாம்.

## SELECT BIBLIOGRAPHY:

Agesthialingom, S. 1961 — Description of the Language of Patirruppattu, ph D. Dissertation, Kerala University.

Meenakshisundaram, T.P. 1964 — A History of Tamil language. Deccan College, Poona.

Shanmugam, S. V. 1971. — "Some Problems in Old Tamil Phonology", Indo-Iranian Journal Vol. XIII, Part 1.

Sakthivel, S. 1970 — Field Notes on Toda Language Annamalai University.

Zvelebil. K. 1964. — "Spoken language of Tamil Nad", Archiv orientalni, Vol. 32 No. 2.

---

"மன்னன் கவிஞர் மனமலர்க்கு மார்த்தாண்ட
னென்ன வருபாற்க ரேந்திரனு — மன்னுபுகழ்ப்
பாண்டித் துரையென்னும் பாரிநிகர் வள்ளலும்போ
லீண்டித் தமிழ்வளர்த்தார் யார்?"

"செந்தமிழ்"

---

# தமிழ் நூல்களுள் யானை I

## தொல்காப்பியத்துள்:-

### விஞ்ஞானக் கண்ணோட்டம்

*சித்தாந்த சைவமணி.*

*வித்துவான். சு. சுவர்ணகாளீச்சுரன்*

*பேராசிரியர் அரசர் கல்லூரி, திருவையாறு.*

எல்லாரும் எல்லாப் பொருளையும் காண்கிறார்கள். ஆனால் விஞ்ஞானி காணும் கண்ணோட்டம் வேறு அப்பொருளினிடையே தன் மனத்தினைச் செலுத்துகின்றான். அப்பொருளின் தன்மை, இயக்கம், முதலியன அவன் கண்முன்னே நிற்கின்றன. இவ்வாறே தாவரங்களின் இயல்புகளை ஆயும்பொழுது ஏற்படும் கருத்துக்களே தாவர இயல் ஆராய்ச்சியாக (Botany) மிளிர்கின்றன. இவ்வாறே விலங்குகளை நோக்கும்போது தோன்றும் ஆய்வுகள் விலங்கியல் நூல்களாச் (Zoology) சிறக்கின்றன. இவ்வாறே நிலம் முதலியவற்றை ஆயும்போது தோன்றுகின்ற கருத்துக்களே பௌதிக நூல்களாக (Geography) மிளிர்கின்றன. இவ்வாறே மக்களின் குமுகாய அமைப்பினை நோக்கும்போது தோன்றும் ஆய்வுகள் (Sociology) குமுகாய நூல்களாக மிளிர்கின்றன.

**இலக்கிய நோக்குள் யானை:**

இத்தகைய கண்ணோட்டம் இலக்கிய நோக்காளர்களுக்கும் உண்டு என்பதற்குச் சான்றுகளாகத் தமிழ் நூல்களில் காணப்படுவனவற்றை ஆய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும். இத்தகைய நிலையில் விலங்குகளை நமது புலவர்பெருமக்கள் எவ்வளவு ஊன்றி நோக்கி அதன் இயல்புகளை பிற கருத்துக்களோடு கலந்து நமக்குத் தந்துள்ளார்கள் எனக் கருதும்போது நம், மனக்கண் முன் முதலில் நிற்பது யானை என்னும் விலங்காகும்.

*யானை வாழுமிடம்:*

தாய்லாந்து, காம்போடியா, பர்மா, இலங்கை, சுமத்திரா, ஜாவா, மலேசியா, முதலிய நாடுகளின் மலைப்பகுதி சார்ந்த காடுகளிலும், இந்தியாவில் இமய அடிவாரம், அஸ்ஸாம், உத்திரப்பிரதேசம், நீலகிரி, மைசூர், குடகு, கேரளம் ஆகிய இடங்களிலும் யானைகள் வாழ்கின்றன. யானை வாழுமிடம் மலைப்பகுதியே என்பதனை நமக்குத் தொல்காப்பிய இலக்கணம் குறிஞ்சிப் பகுதியில் வாழும் மிருகங்களுள் யானையைக் குறிப்பிட்டுள்ளமையாலறியலாம். அக்குறிஞ்சி நிலமானது திரிந்து பாலையான பொழுதும் வற்றிய நிலைகளிலும் யானை துன்பத்துடன் அங்கு வசிக்கும் என்பதனை அறியும்பொழுது, வளமுள்ள வாழ்வில், வளமுள்ள பதவியில், வளமுள்ள அரசியலில் உடனிருந்து அனுபவித்து, வாழ்வு வளஞ் சுருங்கும் பொழுது, பதவியினின்றும் ஓய்வு பெறும்பொழுது, அரசியல் மக்களிடத்துத் தனது செல்வாக்கை இழந்தது போல் தோன்றுகிறபொழுது பழமையை நினையாது உடனே விலகிப் பிறரை நாடும் மனிதனை நாம் என்ன எண்ணுவது? அதுநிற்க, அம்மலைப் பகுதியும் காடுகள் நிறைந்ததாக இருத்தல் வேண்டும். வாழ்ச்சிக்கிழமைக்குச் சேனாவரையர் "காட்டது யானை" என எடுத்துக் காட்டுகின்றார்.

*யானையின் மரபுப் பெயர்கள்:*

ஆண்பாற் பெயர், பெண்பாற்பெயர்களது மரபுகளைக் கூறும்பொழுது தொல்காப்பியர், ஆண்பாற் பெயரில் முதலாவதாக யானையைக் குறிக்கும் களிறு என்னும் பெயரையும், அவ்வாறே பெண்பாற் பெயரில் முதலாவதாக யானையைக் குறிக்கும் பிடி யென்னும் பெயரையும எடுத்துக் காட்டுகின்றார். மிருகங்களில் மதிப்புடையது யானை என்பது தொல்காப்பியர் கருத்து என்பதனால் இதனால் புலனாகின்றது. ஏனெனில் மற்ற விலங்குகளைவிட யானையின் கர்ப்ப காலம் இருபத்திரண்டு மாதங்கள். நன்றாகப் பழக்கப்பட்ட

யானை, பன்னீராயிரத்திலிருந்து இருபத்தையாயிரம் வரை விலையாகுவதாலும், யானைத் தந்தங்கள் பற்பல வேலைக்கும் பயன்படுதலாலும் நாட்டைக் காக்கும் பணியில் யானைக்கு முற்காலத்தில் பங்கு இருந்தமையாலும், இப்பொழுதும் கேரளப் பகுதிகள் யானைகள் பல்வேறு வகைகளிலும் பயன்படுவதாலும் யானையின் தரம் உயர்ந்ததாயிற்று பேராசிரியர் இதற்கு விளக்கம் கூறும்பொழுது களிற்றை முற்கூறினார் அப்பொருள் விலங்கினுட் சிறந்தமையால் என்றும், ஆண் பாலில் களிற்றை முற்கூறியவாறு போலப் பெண்பாலில் பிடியினை முற்கூறியது என்று எழுதுவதைக் கொண்டும் தொல்காப்பியர் யானை மீது கொண்டுள்ள கருத்தினை அறியலாம், வார்கோட்டு யானைக்கு ஒருத்தலென்ற பெயரும் உண்டென்று காட்டுகின்றார். யானைக்குக் கன்று, குஞ்சரம், என்பன இளமைப் பெயர் என்று காட்டினார் தொல்காப்பியர்.

### யானையின் அமைப்பு.

யானைக்கு மிகவும் உரியது கொம்பு ''அதன் கூர்மையாலே பிற உயிர்களை வெல்லும்,'' இதனதிதுவிற்றென்னும் கிளவியும் அன்னபிறவும் நான்கனுருபு, தொன்னெறி மரபின் தோன்றலாறே'' என்னும் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாகச் சேனவரையர் ''யானைக்குக் கோடு கூரிது'' என்று எழுதுவதாலறியலாம். மேலும் யானைகளின் இனத்தை ஆயும்பொழுது வனஇயல் ஆய்வினர் பன்றி இனத்தைச் சேர்ந்தது என முடிவு கட்டுகின்றனர் அவர்கள் மிருகங்களையே மூன்று இனங்களுள் அடக்கிவிடுகின்றனர் நாய பன்றி, பூனை, ஆகிய மூன்றனை அமைப்பிலேயே எல்லா மிருகங்களையும் அடக்குகின்ற நிலையில், பன்றி வகையை யானை சேர்ந்தது என்பதை நமக்குத் தொல்காப்பியர் குறிப்பாகக் காட்டுவார் போல ''வேழக்குறித்தே விதந்துகளிறென்றல், கேழற்கண்ணும் கடிவரையின்றே'' எனக் கூறினார்.

யானைக் கொம்பினைக் குறைத்து விடுவார்கள். என்ற பழக்கத்தை ''கோட்டைக் குறைத்தான்'' ''கோட்டை நுனிக்

கண் குறைத்தான்'' எனவரும் எடுத்துக்காட்டுகளால் அறிகின்றோம். யானைத் தந்தங்களுள் மிகப் பெரியது பதினொரு அடி நீளம், 255 பவுண்டு எடையுள்ளது இத் தந்தம் பேங்கேங் பொருட்காட்சியில் இருக்கிறது. பிரிட்டனிலுள்ள பொருட்காட்சியில் 228 பவுண்டு எடையுள்ள தந்தத்தைக் காணலாம். ''ஆப்பிரிக்காவில் தந்தத்திற்காக சராசரி 1800 யானைகள் பயன்படுகின்றன. யானைத்தந்தத்தால் கட்டில் முதலியன அமைந்தமையை நெடுநல்வாடை முதலிய நூல்களால் அறியலாம். யானைகளில் வெள்ளைநிற முடையவை கலிபோர்னியா பகுதியில் வாழ்கின்றன. ஆனால் நீலநிறமுள்ள யானைகளோ, வெள்ளை நிறம் தவிர மற்றை நிறமுடைய கொம்புகளையுடைய யானையோ இல்லை, 'இத்தகைய நீலநிறமும் பவளம் போன்ற செம்மையையுடைய கொம்பும் உடைய யானையைச் சிற்றூர்களிலுள்ள சாதவாகனர் கோயில் (ஐயனார் கோயில்) சுதைவேலைப் பாட்டால் அமைந்த யானையில்கூடக் காண முடியாது. என்பதனை ''மன்னுப்பொருளும் அன்னவியற்றே'' என்னும் நூற்பாவில் பவளக்கோட்டு நீல யானை சாதவாகனன் கோவிலுள்ளுமில்லை'' எனச் சேனாவரையர் எடுத்துக் காட்டுவதால் அறிலாம்.

**யானைகளின் இயல்பு:**

யானைகளின் இயல்பு தனித்துச் செல்லாமையால் முப்பது அல்லது நாற்பது யானைகள் சேர்ந்தே செல்லும். அக்கூட்டத்துள் ஒரு யானை தலைமை தாங்கும். அந்த யானையைப் பின்பற்றி அந்தக் குழுவிலுள்ள யானைகளனைத்தும் பின்பற்றி நடக்கின்றன. இதனை நன் மாணாக்கர்க்கு எடுத்துக் காட்டாக இலக்கணம் கூறுகின்றது. இத்தகைய மாணாக்கர்களுக்கே கற்பிக்க வேண்டுமாம். கற்பிக்கத் தக்க மாணாக்கர்களுக்கு இலக்கணம் கூறும்பொழுது ''யானை, ஆனேறென்றிவை போலக் கூறிக் கொள்ப குணமாண்டோரே'' என எடுத்துக்காட்டுகிறார். இவற்றுள்ளும் யானைக்கே முதலிடம், யானையின் இயல்பென்னை ''குழுஉப்படுப் புறந்தருதல் குஞ்சரத்தியல்பே'' எனக் கூறுகிறது இலக்கணவிளக்கம்.

இத்தகைய யானைகளும் கூட்டமாகச் செல்லும் இயல்பில் மாறுபடுகின்றன இக்காலத்தில் என்பதை சென்ற ஆண்டு மைசூரில் யானை பிடித்தோர் கூறும் அனுபவத்தாலறிகின்றோம். தற்காலமாணுக்கர் சிலரின் நிலையையும் எண்ணும்போதும் என்னே காலத்தின் கோலம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

**யானைப்பாகர்:**

இந்த யானைகளைப் பாதுகாப்போர் பாகர் எனப்படுவார் என அறிகின்றோம் மரபு வழுவாமைக்கு உரையாசிரியர் இதனையே காட்டுவார். இத்தகைய பாகர்கள் யானையின் இயல்பனைத்தும் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். ஓர் யானையின் அடிச் சுவட்டினைக் கண்டே நடந்து சென்ற யானை எத்தகையது என்று கூறிவிடுவார்களாம், என்னே! அவர்கள் திறமை! ஓர் பாகன் காட்டுள் செல்லும்பொழுது யானையின் அடிச்சுவட்டினைக் காண்கின்றான். இந்த யானை அரசுவா ஆதற்குரியது எனக் கூறிவிடுகின்றார். அரசுவாவின் இலக்கணம் பின் வருமாறு:— நான்கு காலும் துதிக்கையும் கோசமும் வாலும் ஆகிய ஏழுறுப்புக்களும் நிலத்திற்றோய்தல் வேண்டும். முத்தையும் சங்கையும் மொத்த வெண்ணிற முடையதாய்கால்நகங்கள் அமைந்திருக்க வேண்டும். காலினாலும் துதிக்கையினாலும் உடம்பாலும் வாலினாலும், கொம்பினாலும், கொல்லவல்லதாக இருக்க வேண்டும். ஏழுமுழம் உயர்ந்து ஒன்பது முழம் நீண்டு பதின்மூன்று முழம் சுற்றுடையதாய் இருத்தல் வேண்டும். சிறிய கண்கள் சிவந்த புள்ளிகள், முற்பாகம் உயர்ந்து பிற்பாகம் தாழ்தல். இவ்வரச யானையின் இலக்கண மெல்லாவற்றையும் அடிச் சுவட்டைக் கொண்டே யானையைக் காணாமலே இச்சுவடு அரச யானையினது என்று கூறிவிடுகின்றான் இதனை ''பொருளொடு புணராச் சுட்டுப் பெயராயினும் பொருள் வேறுபடாதொன்றாகும்மே'' என்னும் நூற்பாவிற்குச்

சேனாவரையர் ''யானைநூல்வல்லான் ஒருவன் காட்டுட் போவுழி ஓர் யானை அடிச்சுவடு கண்டு இஃது அரசுவா ஆதற்கு இலக்கணமுடையது. என்ற வழிச் சுட்டுப் பெயர் பொருளொடு புணராமை நின்றது என எடுத்துக்காட்டுகின்றார்.

***யானைச்செல்வம் :***

யானைகளை மிகவுடைமையையே செல்வத்தின் சிறப்பு என்று கருதினார்கள். ஆண் யானைகளைப் படைக்குச் சிறப்பாகக் கொண்டார்கள் என்பதனை ''பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம் மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன'' என்னும் நூற்பாவுரையில் சேனாவரையர் ''நம் அரசன் ஆயிரம் யானையுடையன் என்பது பெயரிற் பிரிந்த, பெண்ணொழி மிகுசொல் என எழுதுகின்றார். தலைவன் தனது செல்வச் செருக்கைக் காட்ட களவுக் காலத்தும் தலைவியிடம் செல்லும்போது யானை மீது செல்வானும். களவு வெளிப்படுதற்கேதுவாக இவ்வாறு செல்லுதல் வழுவாயினும் செல்வச் செருக்கைக் காட்டுதலால் வழுவமைதியெனப் பொருளியலில் ஆசிரியர் தொல்காப்பியனார் ''தேரும் யானையும் குதிரையும்பிறவும் சேர்ந்தன ரியங்கலும் உரிய என்ப'' எனக் கூறுகின்றார்.

***அகவாழ்வுள்யானை :***

தலைவி ஒரு தலைவனிடம் ஒன்றியுயர்ந்தபாலது ஆணையாலே களவில் தன் மனத்தைப் பறிகொடுத்த நிலையை அவளது இல்லத்தார் அறியாது, பிறருக்குத் திருமணம் செய்ய நினைக்கின்றார்கள். ஒருவனை மனத்தில் வரித்து மற்றொருவனை கொள்ளல் கற்பறம் அல்லவே ஆதலால் அவ்வறத்தொடு நிற்றற் பொருட்டு, தோழி உண்மை நிலையைச் செவிலித்தாய்க்கு எடுத்துரைக்கப் பயன்படுவதிலே யானையும் ஒன்று என்பதனை அறிகின்றோம்'' தலைவி தினைப்புனத்துள் இருந்த பொழுது ஒரு யானைவர அந்த யானையை

அடக்கித் தலைவியைக் காத்தான் எனச் செய்தியை வெளிப் படுத்தலை ''களிறுதருபுணர்ச்சி'' என எடுத்துக்காட்டு வார்கள்;

**யானைமறம்:**

இவ்வாறே புறத்திலும் யானை சிறப்புடையது மலை யையும் ஒரு மோது மோதிப் பொருதற்கு ஆயத்தமாகு மாம். இங்கு மலை போரிடவில்லை யெனினும் வீரத்தால் யானை அதன்மேலே பொருகின்றதாம்'' இதனைச் சேனாவரை யர் ''அதனோடியைந்த வேறு வினைக்கிளவிக்கு'' எடுத்துக் காட்டாக ''மலையொடு பொருதமால்யானை'' எனக்காட்டி, பொருதல் யானைக்கல்ல தின்மையின் வேறுவினைக்கிளவியா யிற்று என எழுதியுள்ளார்.

மேலும் யானை புலியோடும் சண்டையிடும் அநேகமாக யானையே வெல்லும். புலியும் வெல்வதுண்டு. யானைக்கும் புலிக்கும் பெரும்பகை. இவ்வாறு யானைக்குப் புலியினிடத்து வெற்றியும் தோல்வியும் நிகழுமென்பதனைத் 'தடுமாறு தொழிற் பெயருக்கு இரண்டும் மூன்றும் கடிநிலை இலவே பொருள் வயினான'' என்னும் நூற்பாவின் உரையில் ''புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை என, இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கியவாறு காண்க என்ப தனாலறிகின்றோம்.

யானையும் நன்றாகப் பழக்கப்பட்டுப் போருக்குப் பயன் பட்டு வந்தது. நால்வகைப் படையுள் யானைப்படையும் ஒன்று. புருடோத்தமனின் யானைப்படையைக் கண்டு, கிரேக்கமாவீரன் அலெக்சாண்டரே அச்சம் கொண்டார். ஹனிபாலுக்கும் உரோமானியருக்கும் நடந்த போரில் ஹனிபால் முப்பத்தேழு யானைகளுடன் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து இத்தாலி நாட்டை அடைந்தானென அறிகின்றோம்.

இதனையே ஆசிரியர் தொல்காப்பியனார் புறத்திணை யியலில் தானை யானை, குதிரை என்ற நோனாருட்டும் மூவகை நிலையென எடுத்துக்காட்டுகின்றார். இதற்கு நச்சினார்க்கினி யர் பின்வருமாறு உரை விளக்கம் தருகின்றார். துறக்கம் புகும் வேட்கையுடைமையிற் காலாளை முற்கூறி, அதன்பின் மதத்தால் கதஞ்சிறந்து தானும் போர் செய்யும் யானை யைக் கூறி, அதன்பின்னர் மதத்தால் கதஞ்சிறவாத குதிரையை அதன் பின்னர் கூறினார். நிலை என்னாது வகை என்றதனால் தாமே மறஞ்சிறந்து பொருது வீழ்தலும், அர சனே வலில் பொருது வீழ்தலும், யானையும் குதிரையும் ஊர்ந்தானே வலிற் பொருதலுமாம் என்றார்.

மாற்றுவேந்தன் ஊர்ந்துவந்த களிற்றை கையெறிந் தாலும் கழுக்கொண்டெதிர்ந்தாலும் விலக்கி அவனையும் அக்களிற்றையும் போர் செய்த பெருமையும் அங்ஙனம் களிற்றொடுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் வியந்து பட்டோலைச் சூழ்ந்து நின்று ஆடுங் திரட்சியும் முறையே களிறெறிந்தோர்பாடு, களிற்றொடு பட்டவேந்தனை அட்டவேந்தன் வாளோர் ஆடும் அமலையும்'' என்னும் துறை களால் அறியலாம்.

**தொல்காப்பியத்துள் யானை:**

இவ்வாறு தொல்காப்பியத்தில் காணப்படும் இலக் கணத்தைப் பயிலும்போதே நாமும் யானை வாழும் இடம், யானையின் அமைப்பு, இளமை, ஆண் பெண்பாற் பெயர்கள், யானையினது தந்தம் குழுவாகத்திரியம் இயற்கை யானைப் பாகன் யானையைப் பற்றிய நூலின் வல்லமையுடன் திகழ் தல், யானைச் செல்வம் அகம் புறமாகிய வாழ்க்கையில் பயன்படுதல் ஆகியவற்றையும் அறிந்து ஆசிரியர் தொல் காப்பியனாரையும் உரையாசிரியப் பெருமக்களையும், யானை யையும் வாழ்த்தி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

———

''இருமுந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளி வழங்கு திசையும்
வறிது நிலையே காயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும் அளத்தற்கரியை''

அவ்வரசனின் அறிவின் பரப்பிற்கு ஒரு உவமை கண்டார் புலவர். இவ்வுலகின் பரப்பைச் சமம் ஆக்கலாம் என எண்ணினர்; ஆயின் இவ்வுலகின் அகலத்தையும் நீளத்தையும் அறிஞர்கள் ஒருநாள் அறிந்து கூறிவிடுவர் என அன்றே அறிந்திருந்த அப்புலவர் அம்மன்னவனின் அறிவிற்கு ஒப்பாகாது எனத் தள்ளி விட்டார். கடலை ஒப்பாக்கலாம் எனின் அதன் ஆழ நீளத்தையும் அளந்து சொல்லி விடுவரே என அதனையும் விலக்கி விட்டார். அவன் பலதுறை அறிவுடையவன், அரசியலிலிருந்து வேதாந்தம் வரை அவன் அறியாத துறையில்லை. ஆராயாத கலை அக்காலத்தில் இல்லை எனலாம். ஆகவேதான் எல்லையில்லாத வான வெளியையும் ஈடு ஆகாதென எடுத்தெரிந்து விடுகிறார்.

அறிவு மட்டும் இருந்து பயன் இல்லை, அறிவோடு அன்பும், அளவோடு கலந்து செயலாற்ற வேண்டும். அறிவும் அன்பும் இரண்டற இணைந்து கலக்கும்போது தான் ஒருவன் சமுதாயத்திற்குச் சிறந்த சேவை செய்ய முடியும். ஒருவன் அறிவில் சிறந்த மேதையாக இருக்கலாம். அரம் போலும் கூரிய அறிவு படைத்தவராகவும் விளங்கலாம். ஆயின் என்? பண்பில்லாதவன், மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான மக்கட் பண்பும் இல்லாதவன என்றால் அவன் அறிவு எதற்குப் பயன்படும்? தீமைக்கே பயன்படும்; நச்சுமரம் போல் சமுதாயத்தையே அது கெடுத்துவிடும்.

''அரம்போலும் கூர்மையுடையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்''

என்றார் வள்ளுவர்.

"அறிவும் ஈரமும் பெருங்கண்ணோட்டமும்" என்ற வரி நமக்கு அவ்வேந்தனுடைய பண்புகளை நினைவுறுத்துகின்றது. அவன் அன்போ எல்லையில்லாதது. அவன் கண்ணில் காணும் கருணையோ கரை காணாதது. அன்பு, அறிவு அருள் ஆகிய மூன்றும் எவ்வாறு அவனிடம் இணைந்தன? ஆம் அவனை ஒளி வீசும் உலோகங்களின் கலப்பு என்னலாம்.

கயவர்கள் காட்டிய வழியிற் சென்று சிக்கல்களில் மாட்டிக் கொண்ட மன்னர்கள் வரலாற்றில் பலர் உண்டு. நமது மன்னவனிடம் எத்தகையோராலும் தீய வழிகாட்ட இயலாது. எத்தகைய சிக்கலான சூழ்நிலைகளிலும் திறம்பட செயலாற்றும் அறிவும், பொறுமைப் பண்பும் அவனிடம் உண்டு. அதனால்தான் 'அவை அளந்தறியினும் அளத்தற் கரியை' என்று புலவர் நம் புரவலனை வியந்து பாராட்டினர்.

"கண்ணிலாக் குழந்தைகள் போல் பிறர் காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார்" என்று பாரதி குறிப்பிடுவார்" நாட்டு நிலையும், மக்கள் வாழ்வு நிலையும் அறியாத அரசன், அரசியல் அறிவு இல்லாத அரசன் கயவர்கள் கையில் சிக்கி மக்களுக்கு, நாட்டிற்குத் தீமைகள் பல செய்வதை நாம் இன்றும் காண்கின்றோம். அத்தகைய நிலை எதுவும் அங்கு இல்லை எனப் புலவர் அரசனின் அறிவு, அன்பு முதலியவற்றை விளக்கியுள்ளார்.

"...........அனையை ஆகன்மாறே
மன்னுயில் எல்லாம் நின்னஞ் சும்மே"

—புறம் 20.

நிலைபெற்ற எல்லா உயிர்களும் தம்மன்னவனுக்குத் துன்பம் ஏதும்வந்திடுமோ என அஞ்சின என்பது அவ்வடிகளுக்குரிய பொருளாக நாம் அறிய வருகின்றோம்.

''இருமுந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும அளத்தற்கரியை
அறிவு மீரமும் பெருங்கண் ணோட்டமும்
சோறு படுக்கந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறதுதெறல் அறியார் நின்னிழல் வாழ்வோரே.
திருவில்லல்லது கொலைவில்லறியார்
நாஞ்சில் அல்லது படையு மறியார்
திறனறி வயவரோடு தெவ்வர் தேயவப்
பிறர் மண்ணுண் ணுஞ் செம்மலின் னுட்டு
வயவுறு மகளிர் வேட்டுணினல்லது
பகைவர் வுண்ணா வருமண்ணினையே
அம்பு துஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலேயே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியாவே மக்காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயிர் எல்லாம் நின் னஞ்சும்மே''

—புறம் 20.

இவ்வழகுக் கவிதையைப்பாடிய புலவர் கவிஞர் குறுங்கோழியூர்க் கிழார் ஆவார். மக்கள் வாழ்வு உயர வாழ்ந்த மன்னவன் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற பெரியோன் ஆவான்.

இவ்வாறு நம்மரசனின் வரலாற்றைச் சுவையுடன் அள்ளிப் பருகிய நமக்கு ஆர்வம் அதிகமாகின்றது. அப் பாராட்டுரைக்கு என்ன பொருள் என்று அவரையே கேட்க லாமா? வேண்டாம். நமது முகமலர்ச்சியின் இடையே

கலந்திருக்கும் திகைப்பையும் அவர் அறிவார். மக்கள் மகிழ்ச்சி எய்திட உழைக்கின்றுன் மன்னன். உழவுக்கும் தொழிலுக்கும் ஊக்கம் தருகின்றுன் ஆதலின் அரசனிடம் மக்களுக்கு அன்பு அதிகம், ஏன் மக்களுக்குக் காதல் பொங்கிப் பெருகிற்று என்றே கூறலாம்.

நாட்டில் நல்லவர் தீயவர் என இருசாரர் என்றும் இருப்பர். ஆட்சியாளர் நல்லவர் பக்கம் இருந்தால், ஏழை எளியவருக்கு நன்மை பல செய்தால், தீயவர்களை அடக்கினுல் தீயவர் பொறுமையுடன் இரார். பொங்கி எழுவர். அவர் சிந்தை நேர்வழியில் செலுத்தார். வஞ்சனையாக மறைவாக அவ்வரசனுக்குத் தீமை செய்ய முயல்வர். அதனை எண்ணியே மக்கள் அஞ்சினர்.

ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறை உத்தமர் உலகில் தோன்றுவர். அவர் அறிஞராய் வளர்வதும், தியாகியாய் மக்கள் வாழ்வில் மலர்வதும் ஆட்சித் தலைவனுய் அரியணையில் ஏறி அமர்வதும் அருமையினும் அருமை அத்தகையோன் மன்னவனுய அந்த நாட்டில் விண்புகழவீற்றிருக்கின்றுன்; அவ்வரசனுக்கு ஊறு உண்டாக மக்கள் விடுவார் வார்களா? அவன் உயிருக்கு ஆபத்து உண்டானுல் மக்கள் அஞ்சி அஞ்சி வருந்தார்களோ? ஆறறிவு படைத்த மக்கள் மட்டும் அல்லாது அந்நாட்டில் இருந்த உயிர்கள் எல்லாம் அவ்வாறு அஞ்சியதாகப் புலவர் அறிவிக்கின்றுர். உலகுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகத் திகழும் மன்னவனையும், அவன் நல்லாட்சியையும் காணும்போது நாம் வியப்படைகின்றோம். அத்தகைய நல்ல அரசியல் சூழ்நிலை, பொற்காலம் வந்திடாதோ என நாம் விரும்பி வரவேற்போம்.

———

# "கொள்ளெனக் கொடுத்த கொடையாளி"

(புலவர். இரா. இளங்குமரன், திருநகர், மதுரை-6)

அபிதான சிந்தாமணி என்பதோர் அரிய நூல். அந்நூல் சென்னை, பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியராக விருந்த உயர்திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. 1050 பக்கங்களைக் கொண்ட அந்நூல் 1910 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வெளிவந்தது. அதன் முன்னுரைக்கண் நூல்வெளி வந்த வரலாற்றை ஆசிரியர் நன்றியுணர்வோடு குறித்துள்ளார். அக்குறிப்பு, தமிழ் வள்ளல் பாண்டித்துரையை அறிந்து கொள்ளுதற்குரிய குறிப்புக்களுள் ஒன்றாகும்.

ஆசிரியர், அபிதான சிந்தாமணியை எழுதி முடித்துச் சென்னையில் வாழ்ந்த செல்வர் சிலரிடம் காட்டினார். அதற்குக் கிடைத்த விடையையும், மற்றை முயற்சிகளையும் அவரே, குறிப்பிடுமாறு காண்போம்.

"அவர்கள் இத்தகைய நூல் தமிழிற்கு இன்றியமையாததே; அதனை வெளியிடுக என்றனரே அன்றி அதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

"பின்பு யாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ கனகசபைப்பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்களிடம் இதன் ஒரு பாகத்தைக் காட்டினேன். அவர் 'இஃது அரிய தமிழ்க் கதை அகராதி; இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டுமென ஒரு பத்திரம் எழுதித் தந்தனர். புரொபஸராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் அவர்களிடம் காட்டினேன். அவர், 'இதனையொப்ப நானும் ஒரு நூல் எழுதிக்கொண்டு வருகிறேன்' என்று கூறினரே அன்றி வேறொன்றுங் கூறவில்லை. அவர் கருத்தென்னோ

அறியேன். அதற்குப் பின்னிதனைச் சென்னை கியூரேட்டரும் பச்சையப்பன் கல்விச்சாலைத் தரும விசாரணையின் எடிகேஷனல் டிரஸ்டியுமாகிய பிரம்ம ஸ்ரீ வ. கிருஷ்ணமாசாரியரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக் காரர்களிடம் காட்டி **செலவு அதிகம் பிடிக்கும்** எனக்கூறி விடுத்தனர். நான் கூடிய அளவில் உயர்தரக் கல்வி போதிக்க வல்லேனுயினும் ஊழ் வலியால் சென்னை, பச்சையப்பன் விசாரணைக்குட்பட்ட பி. டீ. செங்கல்வராய நாயகர் கோவிந்த நாயகர் கலாசாலைகளில் அமர்ந்து செல்வாக்கிலாததால் வருவாய் மட்டாக அச்சிடப் பொருளிலாது, இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஓர் அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன். அவர்கள் '**இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாம்**' எனவும், சிலர், '**முற்றுறப் பலநாள் பிடிக்கும்**' எனவும், சிலர் கையொப்பமிட்டுஞ் சென்றனர். இச்சோர்வால் எனக்கு அக்கார்யத்தில் ஊக்கஞ் செல்லாது '**நூலைப் புற்றிடுவோமா**' என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனையொத்த சிறு நூல்கள் இயற்றினர். அதனைக் கண்டுந் திருவுளப் பாங்கென்றிருந்தேன். இது நிற்க, நான் வழிபடு கடவுளாகிய மலைமகணுயகர் உள்ளக்குறிப்போ நான் முதன் முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ இரண்டாமுறை வெளிப்படுத்திய அறிக்கையோ மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரஸிடெண்டும், பாலவனந்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ்வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமி தேவரவர்களின் திருக்குமாரரும் **என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல் வரும் ஆகிய** ஸ்ரீமான் பொ. **பாண்டித்துரைசாமித் தேவரவர்களின்** கைப்பட்டுத் **தாமே சென்னைக்கு வந்து** நான் எழுதிய நூலைக் கண்டுகளித்து அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சுயந்திரசாலையில் அச்சிடுவான் எண்ணி, என்னிடமிருந்த பிரதிகளைத் **தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும்** பலரைக் கொண்டு

**சுத்தமாய் எழுதிவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திர சாலையில் என் முன்னிலையில் அச்சிட உத்தர வளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந் தனர். அவர்கள் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்.''**

இம்முன்னுரைப் பகுதியால் ஆசிரியர் நூல்வெளிக் கொண்டு வருதற்குக் கொண்ட அவாவும், அதற்குக் கிட்டிய ஏமாற்றங்களும், பால் நினைந்தூட்டும் தாய்போல் தாமே தேடிவந்து உதவிய பாலவனத்தம் குறுநில மன்னர் பைந் தமிழ்ப் பாண்டித்துரையின் செயலும், ஒரு நூல் சீரிய நிலை யில் வெளிவருதற்குச் செய்ய வேண்டிய கடப்பாடுகளும் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளமை, தமிழ் வளர்ச்சி நாடுவார் உளங்கொள்ளத் தக்கவையாம். பாண்டித்துறை தாமே தேடிச் சென்று நூல்வெளியீட்டுக்கு உதவிய இச் செயற்கருஞ் செயல் '**கொன்னெனக் கொடுத்தல் உயர்ந் தன்று**'' என்னும் கழைதின் யானையார் வாக்கை (புறம் 204) மெய்ப்பிப்பதாம்.

ஆசிரியரின் நன்றியுணர்வு முன்னுரை மட்டில் நிற்க வில்லை. தம் நூலகத்துப், 'பாண்டித்துரைத் தேவர்' எனத் தலைப்பிட்டும் எழுதுகின்றார்.

''இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பாலவனத்தம் ஜமீன்தாரர். இலக்கிய இலக்கணங்கள் உணர்ந்தவர். தமிழபிமானி. மதுரையில் தற்காலம் தாபித்துள்ள தமிழ்ச் சங்கம் கண்டவர். வித்வான்களை யாதரித்து அவர்களைத் தமிழில் ஊக்கமுண்டாக்குபவர். தக்க பரிசும் அளித்தவர், சைவப்பற்றுள்ளவர். **நானியற்றிய அபிதான சிந்தாமணியை அச்சேற்றிப் பிரசுரஞ் செய்வித்தவர்.** இவர் செய்த நூல்கள் சிவஞான சுவாமிகள் இரட்டை மணி மாலை, இராஜராஜேஸ் வரி பதிகம், சைவமஞ்சரித் திரட்டு, பன்னூற்றிரட்டு முதலிய'',

1938 இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றது. அப்பொழுது திரு. இராசகோபாலாச்சாரியார் ஆட்சி நடந்தது. அண்ணுவிற்கு நான்கு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றது. சிறை செல்லும் அண்ணுவுக்கு அவர் நண்பர் புலவர் அருணகிரிநாதர் என்பவர் 'அபிதான சிந்தாமணி'யை வழங்கினுர். சிறையில் கிடைத்த பொழுதெல்லாம் அபிதான சிந்தாமணியை ஆராய்ந்தார் அறிஞர் அண்ணு. அபிதான சிந்தாமணியை எண்ணும்போதெல்லாம் நண்பர் அருணகிரிநாதரும், நான்கு மாதச் சிறைக் காவலும் நினைவுக்கு வருமாம்! செந்தமிழ்ச்சங்கத்தில் தவழ்ந்த அபிதான சிந்தாமணி, செந்தமிழ்காக்கச் சிறை சென்ற அறிஞர் அண்ணுவின் கைகளில் தவழ்ந்ததை எண்ணின் இறும்பூதாம்!

----

''கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி
பண்ணிப் பரிந்துநமைப் பாவித்த — புண்ணியனைச்
சீராச ராசேந்தரச் செம்மலை நன்னெஞ்சே
பாராட்டிப் பைந்தமிழிற் பாடு.''

''செந்''

# மொழியியலும் அதன் நோக்கமும்

*கி. அரங்கன் M.A., B.O.L., இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனம், மைசூர்-6.*

*நான் புதிதாக ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு புது தில்லிப் புகைவண்டி நிலையத்தில் இறங்கினேன். கூலிக் காரன் ஒருவன் என்னிடம் ஓடிவந்து ஏதோ கூறினான். அவன் கூறியது எனக்குக் கொஞ்சங்கூட விளங்கவில்லை. அதே போல் நான் கூறியது ஒன்றும் அவனுக்கு விளங்க வில்லை. இருவருமே ஏதோ சில ஒலிகளை எழுப்பக் கற்றுக் கொண்டிருந்தும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள இயல வில்லை. இடையிலிருந்த நண்பர் ஒருவர் அவன் கூறியதை எனக்கு ஆங்கிலத்தில் கூறினார். பிறகு நான் ஆங்கிலத்தில் கூறியதை அவர் அவனுக்கு அவன் அறிந்த மொழியில் கூறினார். இப்பொழுது நாங்கள் ஒருவரின் தேவையை மற் றவர் புரிந்து கொண்டோம். அவன் என்னுடைய சாமான் களைக் காரில் கொண்டு வைத்துவிட்டு வேண்டிய பணத் தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டான்.

சிறு நிகழ்ச்சிதான்! கொஞ்சநேர சிந்தனை இதை எளிதில் விளக்கிவிடும். எனக்கு இந்தி தெரியவில்லை; அவ னுக்குத் தமிழும் தெரியாது; ஆங்கிலமும் தெரியாது. இடை யில் இருந்த நண்பருக்கு ஆங்கிலமும் தெரியும், இந்தியும் தெரி யும். ஆகையால் அவர் எங்களுக்கிடையே ஒரு பாலம்போல் அமைந்தார். இதுதான் ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் தோன்றுகிற விளக்கம். ஆனால் மொழியியலான்மட்டும் இவ் விளக்கத்தோடு நிற்பதில்லை. அவன் இதற்கு மேலேயும் ஒரு

---

** இக்கட்டுரை மதுரையில் நடைபெற்ற முதல் அகில இந்திய தமிழாசிரி யர் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.*

படி சென்று மொழியை ஆராய்கிறுன். நாங்கள் இருவருமே ஒருசில ஒலிகளை எழுப்பக் கற்றுக் கொண்டிருக்கிறேம் என முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். இருப்பினும் செய்திப் போக்கு வரத்து இல்லையே ஏன்? ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட மொழி தெரியும் என்று சொன்னுல் அதன் பொருள் என்ன? இவை களுக்கு உரிய விடைகளைக் காண்பதுதான் மொழியியலின் நோக்கம்.

இந்திக்கென்று சில ஒலிகள் உண்டு. அவைகளை நான் ஒலிக்க முடியவில்லை. அதேபோல் தமிழுக்கென்று இருக்கின்ற சில ஒலிகளை அவனுல் ஒலிக்க முடியவில்லை. இதுதானு எங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்குத் தடை? தமிழில் உள்ள ஒலிகளை எல்லாம் அவன் ஒலிக்கக் கற்றுல் என்னேடு பேசிவிடுவானு? இக்கேள்விகளுக்கு 'முடியாது' என்ற எதிர் மறையான விடையைத்தான் தருவதற்கு நாம் தயாராக இருக் கிறேம். ஒருமொழியின் ஒலிகளைக் கற்பதால் மட்டும் நாம் அம்மொழியைக் கற்றவர்களாகிவிட மாட்டோம். அந்த ஒலிகள் சொற்களிலும் வாக்கியங்களிலும் தொடரும் பொழுது ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது. சான்ருக **மரம்** என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதில் 'ம' என்ற ஒலியும் 'ர' என்ற ஒலியும் 'ம்' என்ற ஒலியும் உள்ளன. இவை கள் ஒரு குறிப்பிட்ட முறையில் அமைந்திருக்கின்றன. இதை * **ரமம்** என்று கூறினுலோ * **மம்ர** என்று கூறினுலோ பொருள் விளங்காது. ஆகையால் சொற்களில் ஒலிகள் ஒரு குறிப் பிட்ட ஒழுங்கில் அமைந்துள்ளன என்பது தெளிவு. இதே போல் **மரம்** என்ற சொல்லும் **கள்** என்ற பன்மை விகுதியும் சேரும் பொழுது 'ம்' என்ற ஒலி 'ங்' என்ற ஒலியாக **மரம்** என்ற சொல்லில் மாறுகிறது. இதை மொழியியலார்.

1) ம் —> ங் / — க

என்று எழுதிக் காட்டுவார் இதைத்தான் புணர்ச்சி விதி என்று நம் இலக்கண நூலாரும் உருபொலியனியல் விதி [Morpho-

phonemic rule] என்று மொழியியலாரும் கூறுகிறார்கள். இவ்வாறு சொற்களோ உருபன்களோ ஒன்றிணையும் பொழுது ஏற்படும் மாற்றங்களையும் நாம் அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்! இப்பொழுது திரும்பவும் நாம் முன்பு எழுப்பிய வினாவை எழுப்புவோம். ஒரு மொழியின் செய்திப் போக்கு வரத்திற்கு இவை போதுமா?

இத்துடன் நாம் வேறு ஒரு புதிய செய்தியையும் இணைத்தால் முடியும் என்பது போல் தோன்றுகிறது. ஒவ்வொரு பொருளுக்கும் உரிய சொற்களையும் அச்சொற்களை ஒலிக்கின்ற முறையையும் கற்றுக்கொண்டால் அம்மொழியை ஓரளவு நாம் புரிந்துகொள்ளலாம். சுருங்கக் கூறினால் ஒரு மொழியில் உள்ள சொற்களையும் அவைகளின் பொருளையும் தெரிந்து கொண்டால் அம்மொழி நமக்குப் புரியலாம். இதுவும் ஒரு தவறான கருத்துதான். ஒரு மொழியில் உள்ள சொற்களை நாம் நினைவில் கொண்டு கூறுவதாலேயே அம்மொழியைக் கற்றவர்களாகிவிட மாட்டோம். சான்றாக ஆங்கிலத்தை எடுத்துக் கொள்வோம். இம்மொழியில் சொல்லடுக்கு [Word order] முக்கியமான ஒன்றாகும். வாக்கியம் (2) லும் (3) லும் உள்ள சொற்கள் ஒன்றே. ஆனால் ஆங்கிலம் அறிந்தவர்கள் அவைகளை இரண்டுவிதமான முறையில் உணர்கிறார்கள்.

(2) Rama killed Ravana

(3) Ravana killed Rama

இவ்விரண்டு வாக்கியங்களிலும் உள்ள சொற்கள் ஒன்றாக இருப்பினும், அவைகள் வாக்கியங்களில் அமைந்து கிடக்கின்ற முறையால் இராமாயணமே தலைகீழாக மாறிவிடுகிறது. ஆனால் தமிழில் இவைகளுக்கு ஈடான வாக்கியங்களை

---

*1. இதைக் குறித்த விளக்கத்திற்குக் கோதண்டராமனின் (1969)' சந்தி' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.*

எடுத்துக்கொண்டால் சொல்லடுக்கு அவ்வளவு முக்கிய மானது அல்ல என்பது தெளிவாகும்.

(4) இராமன் இராவணனைக் கொன்றான்.
(5) இராவணனை இராமன் கொன்றான்.

வாக்கியங்கள் (4)ம் (5)ம் ஆங்கில வாக்கியம் (2) க்கு ஈடானதாகும்.

(ó) இராவணன் இராமனைக் கொன்றான்.
(7) இராமனை இராவணன் கொன்றான

வாக்கியங்கள் (6)ம் (7)ம் ஆங்கில வாக்கியம் (3) க்குச் சமமானதாகும். ஆகையால் சொல்லடுக்கு என்ற ஒன்று சில மொழிகளில் இலக்கணத் தன்மை கொண்டது. வேறு சில மொழிகளில் நடையைச் [style] சார்ந்தது. செயப்படு பொருளின் உறவை உணர்த்த நாம் 'ஐ' என்ற உருபைத் தமிழிலும் சொல்லடுக்கை ஆங்கிலத்திலும் பயன்படுத்துகி றோம். இலக்கணத்தில் இத்தொடர்பை ஆராய்கின்ற பகுதி யைத்தான் நாம் தொடரியல் [Syntax] என்று கூறுகிறோம். நாம் இப்பொழுது இலக்கணம் என்பதை இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) ஒலியனியல் பகுதி [Phonological component]; (2) தொடரியல் பகுதி [Syntactic component] இத்துடன் வேறொரு பகுதியையும் நாம் இணைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பகுதியை பொருளியல் பகுதி [Semantic component] என்று மாற்றிலக்கணத்தார் [Transformational Grammarians] கூறுவார்கள். இங்கு நான் பொருளியல் பகுதியைப் பற்றி அதிகம் கூறப்போவதில்லை.

———

நாம் திரும்பவும் முன்பு எழுப்பிய வினாக்களுக்கு இது வரைக் கண்ட செய்திகளை ஒன்று திரட்டிக் காண்போம். ஒருவன் ஒரு மொழியைத் தெரிந்திருக்கிறான் என்று சொன்னால் அவனுக்கு அம்மொழியில் உள்ள ஒலிகளும் அவைகள் சொற்களில் அமைந்துள்ள ஒழுங்கும் தெரிந்திருக்க வேண்டும்; இத்துடன் அவன் அம்மொழியில் உள்ள ஆயிரக் கணக்கான சொற்களையும் அவைகளின் பொருளையும் அறிந் திருக்க வேண்டும். இப்பொழுது அவனுக்கு மொழி தெரியும் என்று ஒப்புக் கொள்ளலாமா? ஒரு மொழியின் தன்மைகளை விளக்குகின்ற இலக்கணம் இவைகளை மட்டும் கூறினால் போதுமா? ஒருவன் ஒரு மொழியை அறிந்திருக்கிறான் என்று அவன் அம்மொழியில் உள்ள சில வாக்கியங்களைக் கூறு வதால் மட்டும் ஒத்துக் கொள்வதில்லை. ஒரு மொழியில் எண்ணிறந்த (Infinite) வாக்கியங்கள் உள்ளன. அவைகளை அவன் சமயம் வரும்பொழுது பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். அதேபோல் புதிய புதிய சூழலில் புதிய புதிய வாக்கியங்களைக் கேட்டால் புரிந்து கொள்ள வேண்டும்; அவனுக்குப் புதிய சூழலுக்குத் தக்கவாறு புதிய வாக்கியங் களைப் படைக்கவும் இயலவேண்டும்[2]. இலக்கணம் என்பதை நாம் இத்திறமையை விளக்கும் ஒரு கருவி என்று கூறலாம். ஒரு மொழியில் உள்ள எண்ணிறந்த உருவாக்கும் ஒருசாதனம் (Device) இலக்கணம். இதுதான் உருவாக்குகின்ற வாக்கியங் களுக்கு அமைப்பு விளக்கமும் (Structural Deseription) அளித்தல் வேண்டும்[3]. சில வாக்கியங்கள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தாலும் அம் மொழியை அறிந்தவன் அதை எளிதில் குறிப்பிட்டு விடுவான். ஆவையால் இலக்கணம் ஒரு குறிப்பிட்ட வாக்கியம் குழப்ப மான பொருள்களைச் சுட்டினால் அவற்றை விளக்கக்கூடிய

2. *இந்த ஆற்றல்தான் விலங்குகளின் செய்தி உணர்த்தும் கருவி களில் இல்லை. இதுதான் மனிதனின் மொழியை விலங்குகளின் 'மொழி' யினின்று பிரிக்கிறது. இதுபற்றிய விளக்கத்திற்கு அரங்கனின் (1969) 'விலங்குகள் பேசுமா?' என்ற கட்டுரையைக் காண்க.*

3. Chomsky, N. (1964 : 9)

ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். சான்றாகக் கட்டன்கள் (Constructions) (8)யும் (9)யும் எடுத்துக் கொள்வோம்.

(8) தில்லை நடராசர் கல்லூரி
(9) New ladies hostel

கட்டன் (8)க்கு இரண்டு விதமான விளக்கம் அளிக்கலாம். முதலாவதாக இது வேறொரு ஊரில் உள்ள நடராசர் கல்லூரி என்ற பொருளைக் கொடுக்கும்; இரண்டாவதாக இது தில்லையில் உள்ள நடராசர் கல்லூரி என்பதையும் குறிக்கும். இதே போல் (9) புதிதாக வந்த பெண்கள் தங்கும் உணவு விடுதி என்பதையும் குறிக்கும்; பெண்கள் தங்கும் புதிய உணவு விடுதி என்பதையும் குறிக்கும். கிளைப்படம் (1—4) இவற்றை விளக்கும்.



1. தில்லை நடராசர் கல்லூரி



2. தில்லை நடராசர் கல்லூரி



3. New ladies hostel



4. New ladies hostel

ஆகையால் நாம் சொற்களை ஒன்று சேர்க்கின்ற முறையால் பொருள் வேறுபடுகின்ற நிலையை இக்கிளைப் படங்கள்

நமக்கு நன்கு விளக்குகின்றன. சொல்லடுக்கு நிலையோடு அவைகளை ஒன்று சேர்க்கின்ற முறையும் முக்கியமான ஒன்ருக இலக்கணத்தில் அமைந்திருககிறது.

சிலதொகைச்சொற்களை நாம் இம்முறையால் விளக்க முடியாது. இவைகள் புற அமைப்பில [Surface Structure] ஒத்திருந்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற இரண்டுவிதமான வாக்கியங்களிலிருந்து உருவாகி இருக்கும் இதை விளக்க நாம் நம்முடைய இலக்கணத்தார் குறிப் பிட்டுள்ள

(10) புலி கொல் யானை

என்ற தொடரைச் சான்ருகக் காண்போம்.[4] இதற்கு இரண்டு விதமான பொருள்கள் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம், முதலாவதாக இது **யானை புலியைக் கொன்றது** என்ற பொருளையும் இரண்டாவதாக **புலி யானையைக் கொன்றது** என்ற பொருளையும் உணர்த்தும். இதை விளக்க நமக்கு மேலே கூறிய முறை கைகொடுக்காது. ஆகையால் இலக்கணம் இரண்டு வகையான வாக்கியங்களைத் தோற்றுவித்து [Generate] மாற்றிலக்கண விதிகள் [Transformational Rules] மூலம் **புலிகொல் யானை** என்ற தொடரை வருவிக்க வேண்டும் இதை நாம் பின்வருமாறு விளக்கலாம்.

(11) புலி யானையைக் கொன்றது—> புலி கொல் யானை
(12) யானை புலியைக் கொன்றது—> புலி கொல் யானை

வாக்கியங்கள் (11)ம் (12)ம் **புலி கொல் யானை** என்ற புற அமைப்பின் அக அமைப்பு [Deep Structure] தொடரியலின் தொடரமைப்பு விதிகள் [Phrase Structure Rules] அக அமைப்பைத் தோற்றுவிக்கும்; மாற்றிலக்கண விதிகள் இவற்றினின்று புற அமைப்பை வருவிக்கும்.

---

4. See Agesthialingom's (1967) 'A Generative, of Tamil' and 'Structural Ambiguities in Tamil' (1965) for detailed discussion.

மொழியியல் ஒரு மொழி தெரிந்தவனின் இத்திறமையை விளக்க வேண்டும். அவன் எப்படி மொழியில எண்ணிறந்த வாக்கியங்களை உருவாக்குகின்றனோ அதேபோல் இலக்கணமும் இவ்வெல்லா வாக்கியங்களையும் தோற்றுவிக்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். வாக்கியங்களில் அமைந்து கிடக்கிற பொருட் குழப்பங்களுக்குத் தெளிவான விளக்கமும் இலக்கணம் அளித்தல் வேண்டும். அம்மொழியில் உள்ள சொற்களிலும் வாக்கியங்களிலும் உள்ள ஒலி முறையைத் தெளிவாக்கலும் இதன் கடமை. சுருங்கக் கூறின் ஒலிகளுக்கும் [Sounds] பொருளுக்கும் [Meaning] உள்ள மரபு வழி உறவை [Relation] பல்வேறு நிலைகளில் [levels] விளக்க முற்படுவதுதான் மொழியியலின் நோக்கம்!

## REFERENCES


அரங்கன், கீ. (1969) 'விலங்குகள் பேசுமா?' தமிழ்ப்பொழில் (ஏப்ரல்–மே)

Agesthialingom, S (1965) 'Structural Ambiguities in Tamil' Indian Linguistics 26.

(1967) 'A Generative Grammar of Tamil' Annamalainagar.

Chomsky, N. (1964) 'Current Issues in Linguistic Theory' The Hague: Mouton & Co.

Kothandaraman, P. (1969) 'On Sandhi' Mimeo. Annamalainagar.

# மொழியியல் கலைச்சொல் விளக்கம் - 4

சு. இராசாராம், எம்.ஏ.

(இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் - 6.)

Language, Race and Culture — மொழி, இனம், பண்பாடு; ஒரு தனிப்பட்ட மனிதனையும் சமுதாயத்தையும் இணைக்கின்ற பாலம் மொழியேயாகும். மொழியைப் பொறுத்த வரையில் தனி மனிதனும் சமுதாயமும் இரண்டு பகுதிகளாகும், அவை ஒன்றோடொன்று இணைந்து நிற்பவை. சமுதாயத்தை விடுத்துத் தனி மனிதனுக்கு மொழி அவசியமில்லை. மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை. இவ்விரண்டும் இணைகின்ற நிலையிலேயே சமுதாயம் உருவாகவும், மனிதன் பகுத்தறிவுள்ள உயிராகவும் வழி ஏற்படுகிறது. சமுதாய அமைப்பிற்கு மொழி தேவையாக அமைவதோடன்றி மனிதனின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மொழியே ஆதாரமாகிறது. தன்னை வளர்ப்பதின் மூலம் சமுதாயத்தை உருவாக்குவதும், சமுதாயம் உருவாவதின் மூலம்தான் வளருவதும், மொழி ஒன்றால் மட்டுமே நடைபெறமுடியும். மேலும், மொழி வாயிலாக மட்டுமே சமுதாயத்தின் ஓர் அங்கமாக மனிதன் இயங்க முடியும் என்றும் கூறலாம. இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தில் அங்கமாகி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு மொழியால் ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றனர். இச்சமுதாயத்தில் ஒருவருடைய எண்ணத்தின் வெளிப்பாட்டை இன்னொருவர் புரிந்து கொள்வதற்கேற்ற ஒரு வழி முறை ஒரு பொது அமைப்பில் வரையறுக்கப் பட்டு பின்பற்றப்படுகிறது. அதுவே மொழி. அம்மொழி வழங்குகின்ற சமுதாயத்தையே பேசும் சமுதாயம் (Speech Community) என்று கூறுகின்றோம்.

எட்வர்டு சாபிர் என்ற அறிஞர் மனிதனுடைய மொழி வளர்ச்சிக்கு அவன் வாழுகின்ற சமுதாயம் முக்கிய பொறுப்பு என்று நம்புகிறார். இவர் மனிதனுக்கு மொழி இயற்கையாகவே கைவரப் பெறுகிறது என்ற கொள்கையை வன்மையாக எதிர்க்கிறார். மனிதன் இயற்கையாகப் பிறந்து இயற்கையாகவே வளர்ந்து இயற்கையாகவே பேசக் கற்றுக் கொள்வதில்லை. பிறக்கும்போதே மனிதன் சமுதாயத்தின் மடியில் பிறக்கிறான். அவனைப் பொறுத்தவரையில அவனுடைய மொழி வளர்ச்சிக்கும் அவன் தனனை சமுதாயத்திடம ஒப்படைத்து விடுகிறான் என்றே கூறவேண்டும் சமுதாயத்தி லுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் மொழியைக் கற்பதற்கென ஒரு மாதிரியாகவே அவனுக்குத் தோற்றமளிக்கின்றனர். எனவே, மனிதனின் மொழி வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இயற்கையாகவே மனிதனின் உடலில் உண்டாகும் வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் சமுதாயம் காரணம் ஆவதில்லை. குழந்தை நடைபழகும்போது பெற்றோரின் துணையையோ அல்லது மற்றவர்களின் உதவியையோ வேண்டுவதில்லை. பிறப்பிலேயே அமைந்துவிட்ட தசையுறுப்புக்களின் அமைப் பில் குழந்தை இயல்பாகவே நடக்க ஆரம்பித்துவிடுகிறது. இம்முயற்சிக்குக் குழந்தையின் சமுதாயச் சூழ்நிலை எந்த விதத்திலும் பொறுப்பாகாது. நடைபழகுவது குழந்தைக்கு இயல்பாகவே (Inherent) கைவரப்பெறும் பழக்கம். ஆனால் மொழி அவ்வாறன்று எனலாம். குழந்தையின் வளர்ச்சிக்கு அதனுடைய சூழ்நிலையே முக்கிய காரணம் ஆகும், அச்சூழ் நிலையிலிருந்து ஒரு குழந்தையைப் பிரித்து வளர்த்து வந்தால் அக்குழந்தை நடக்கப்பழகி விடலாம். ஆனால், பேசிப்பழ கத் தெரியாது.

எவ்வாறு சமுதாயத்தை விடுத்து மொழிக்கு வாழ் வில்லையோ அதேமாதிரி பண்பாட்டை (Culture) விடுத்தும்

மொழிக்கு வாழ்வில்லை என்று கூறலாம். மானிடவியலார் (Anthropologists) மனிதனை, மொழி, இனம், பண்பாடு என்ற முப்பிரிவின் கீழ் ஆராய்ந்து வருகின்றனர். இவை ஒன்றோடொன்று இணைந்து நிற்பவை என்பதோடு ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று காரணமாகிறது என்றும் கூறலாம் மனிதன் இல்லையேல் மொழி இல்லை; மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை; சமுதாயம் இல்லையேல் இனம் இல்லை; இனம் இல்லையேல் பண்பாடு இல்லை. நாம் முன்னர்க் குறிப்பிட்ட 'ஏலேலோ மொழிக் கோட்பாடு' சமுதாயத்தின் தோற்றமே மொழியின் தோற்றம் அல்லது மொழியின் தோற்றமே சமுதாயத்தின் தோற்றம் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. எதனுடைய தோற்றம் முந்தியது என்பது நமது பிரச்சினையன்று ஒற்றுமையோடு ஒரு காரியத்தில் ஈடுபடும் உணர்வை பகுத்தறிவுள்ள மனிதனே உணரமுடியும், அதனாலேயே மனித வாழ்க்கையில் குடும்பம், ஊர், நாடு, உலகம் என்ற பல் வேறு நிலைகளைப் பார்க்க முடிகிறது

இனமும் மொழியும் ஒன்றையொன்று பிரித்து நோக்க முடியாதவை என்பது ஒரு குறிப்பிட்ட மொழி, ஒரு குறிப்பிட்ட இனத்தோடு மட்டுமே இணைந்து நிற்கவேண்டும் என்ற நியதி உடையது என்பது அன்று. இனம், பண்பாடு ஆகியவற்றை விட்டு ஒரு மொழி வேறுபட்ட பல இனங்களையும் பண்பாடுகளையும் ஆக்கிரமிக்கும் வல்லமை வாய்ந்தது மட்டுமன்றி, பண்பாட்டில் சில மாற்றங்களையோ வளர்ச்சியையோ உண்டாக்கும் வலிமையும் பொருந்தியது எனலாம், எடுத்துக்காட்டாக, கி. பி. 1600-இல் இந்திய மண்ணில் காலடி வைத்த ஆங்கிலேய இனமும் மொழியும் இன்று இந்தியாவை மட்டுமின்றி உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றதைப் பார்க்கிறோம். ஆங்கிலேய இனம் நிரந்தரமாக இந்தியாவில் நிலைபெறாவிட்டாலும் ஆங்கிலமொழி இந்திய சமூகத்தின் மத்தியில் ஆங்கில இனமும் இந்திய இனமும் கலந்த ஓர்

இனத்தை உருவாக்கிவிட்டதை உணருகிறோம். ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு முந்நூறு ஆண்டுகள் ஆயினும் முந்நூறு ஆண்டுகளாக வேகமாக வளர்ந்து வருகின்ற ஆங்கில மொழியையும் பண்பாட்டையும் பார்க்கிறோம். பெருவாரியான தமிழர்களின் குடியேற்றத்தால் இலங்கையில் சிங்கள இனத்தவரும், பர்மாவில் பர்மிய இனத்தவரும், மலேயாவில் மலாய் இனத்தவரும் தம்மொழிகளில் தமிழ் மொழியின் குறைந்த பட்ச ஊடுருவலையும், தமிழனுக்கே உரித்தான பண்பாட்டின் சில அம்சங்கள் தம் பண்பாட்டோடு கலந்து விட்டமையையும் உணர்கின்றனர்.

இவ்வாறு இனம், பண்பாடு ஆகியவற்றிற்கு அப்பால் வளருகின்ற ஒரு மொழி பேசுவாரின்றி இறந்து போதலும் உண்டு. எடுத்துக்காட்டாக, சமஸ்கிருத மொழியைக் குறிப்பிடலாம். இந்திய நாட்டிலேயே ஒரு காலத்தில் பேசப்பட்டு வந்த இம்மொழியை இன்று பேசுவார் யாருமில்லை. பதினெட்டாம் நூற்றுண்டில் இலத்தீன் மொழிக்கும் முறையான இலக்கணம் தோன்றுவதற்கு சமஸ்கிருதம் அடிப்படையாக இருந்தது என்று நாம் மொழி வரலாற்றில் படிக்கிறோம். ஆனல், இன்றே இம்மொழி இலக்கண ஆசிரியர்களுக்கும் மொழியியல் அறிஞர்களுக்கும் இலக்கண அறிவின் புகலிடமாக மாத்திரமே இருக்கிறது என்று கூறலாம். இவ்விலக்கண ஆசிரியர்களும் மொழியியல் அறிஞர்களும் சமஸ்கிருத மொழியைப் பேசுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கிவிட முடியாது. ஒவ்வொரு தனி மனிதனும் எடுத்துக்கொள்கிற முயற்சியில் ஒரு சமுதாயம் இதன்பொருட்டு உருவாக முடியும் என்பதை நாம் நம்பலாம்.

சமஸ்கிருத மொழியின் இவ்வழிவிற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால் இரண்டு முக்கிய காரணங்கள் தெளிவாகும். இலத்தீன் மொழி இலக்கணவளம் பெற்று

வளர்ந்த காலத்தில் உயர்தனிமொழியாகக் கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதிப்பகுதியில் ஒப்புமைமொழி யியல் (Comparative Linguistics) வளர்ந்தபோது மொழியை இலக்கணரீதியாகக் கற்பிக்கும் முறை தோன்றியது. இலத் தீன் மொழி இலக்கணவளத்தோடு இருந்தமையால் அம் மொழியைக் கிறித்தவக் கோயில்களில் கற்பித்து வந்தனர். நாளடைவில் இம்மொழி வேதமொழியாகக் கருதப்பட்டு கிறித்தவக் கோயில்களுக்கு மாத்திரமே உள்ளமொழியாக ஆக்கப்பட்டது. இதனுல் மொழியைப் பேசுவோர் அருகி னர். காலப்போக்கில் இலத்தீன் மொழியைப் பேசுவோரே இல்லாமற் போயினர். இந்நிலேயே சமஸ்கிருத மொழிக்கும் நம் நாட்டில் ஏற்பட்டது வேதமொழியாக ஒரு குறிப்பிட்ட இனத்தவரால் மட்டும் சமஸ்கிருத வேதங்கள் பாராயணம் செப்யப்பட்டு வந்தன. சமுதாயத்தின் கீழ்நிலேயில் உள்ளவர் களின் பார்வைக்குக்கூட எட்டாமல் மறைக்கப்பட்டும் வந்தது. வேற்று இனத்தவர்கள் வேதங்களேப் பார்ப்பதையே இவர்கள் பாவமாகக் கருதினர்.

இரண்டாவது முக்கிய காரணமாக இன்னெென்றைக் குறிப்பிடலாம். இலத்தீன் மொழி இலக்கணத்திலும், கிரேக்க மொழி இலக்கணத்திலும் பொதுவாகப் பயின்று வந்த சில சமஸ்கிருத சொற்களேக் காலப்போக்கில் இலக்கண ஆசிரி யர்கள் அகற்ற ஆரம்பித்தனர். தமிழ்மொழியிலும் பயின்று வந்த சமஸ்கிருத சொற்கள் பல இவ்வாறு மெதுவாக அகற் றப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சமு தாயத்திலும் அரசியல் சூழ்நிலேயிலும் ஏற்படுகின்ற முக்கிய மான மாற்றங்களும் வளர்ச்சியும் இதற்குக் காரணமாகின் றன. மொழியைப் பேசுவோரும் குறைந்து பிறமொழிகளில் பெற்றிருந்த இடத்தையும் சமஸ்கிருதமொழி இன்று இழந்து வருகிறது சமுதாயத்தை விடுத்து ஒரு மொழி வாழமுடி யாது என்பதையே சமஸ்கிருத மொழியின் இந்நிலே தெளி வாக்குகிறது.

மனிதர்களிடையே இருக்கின்ற பல்வேறு இன வேறு பாடுகள் மொழி வேறுபாடுகளுக்குப் பொறுப்பாகிறது என்று நாம் நம்புகிறோம். இந்நம்பிக்கைக்கு எந்தவித ஆதாரமு மில்லை. மொழி, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மனிதமனத்தில் வளர்கிறது. இவ்வளர்ச்சிக்கு மனிதன் வாழு கின்ற சமுதாயமே முக்கிய பொறுப்பேற்கிறது. ஏனெனில் கற்கப்படவிருக்கின்ற மொழியின் மாதிரியை ஒரு குழந் தைக்கு அச்சமுதாயமே வழங்குகிறது. அதனால் எந்த குழந் தையும் எந்த மொழியையும் இனவேறுபாடுகளுக்கு அப்பால் கற்றுக்கொள்ள முடியும். கற்றுக்கொள்வதோடு அம்மொழி யைத் தாய்மொழியாக உடையவர்களைப் போல் வேற்றுமை யின்றி எழுதவும் பேசவும் முடியும். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் வாழுகின்ற நீக்ரோ இனத்தவரைக் காட்ட லாம். ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்குக் குடியேறிய வரும் ஆப்ரிக்க மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட-வருமாகிய இந்நீக்ரோ இனத்தவர் ஆப்பிரிக்க மொழியைத் தவிர ஆங்கிலேயத்தையும் சரளமாகப் பேசுகின்றனர். உச் சரிப்பில் அமெரிக்கரின் ஆங்கிலத்தைவிட நீக்ரோ இனத்தவ ரின் ஆங்கிலம் சிறிது வேறுபடுகிறதுஎன்பது உண்மையே இவ் வேறுபாட்டிற்கு ஆப்பிரிக்க இனத்திற்கே உரிய தடித்த உதடும் வன்மையான ஒலியுறுப்புக்களும் காரணம் எனலாம். இதைப் போல் சிங்களத்திலும், பர்மாவிலும் பல ஆண்டுகளுக்கு முன் குடியேறிய தமிழர்களுள் பலர் இன்று பர்மியமொழியோடும் சிங்களமொழியோடும் அம்மொழி பேசுவோரின் பண்பாட் டோடும் தம்மை இனங்கண்டு கொண்டு வாழ்ந்து வருகின் றனர். சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவ னுக்கும் பர்மிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவனுக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு குடியே றிய தமிழனுக்கும் மொழியைப் பொறுத்த வரையில் உச்ச ரிப்பிலோ ஏனையமொழி நிலைகளிலோ அவ்வளவு வேறுபாடு இல்லை. எனவே, இனத்திற்கும் மொழிக்கும் இடையே இயற்

கையாகவே (Inherent) எந்தவிதத் தொடர்பும் இல்லை. மொழிபெறுதல் (Language Acqnisition) இனவேறுபாட்டிற்கும் பண்பாட்டு வேறுபாட்டிற்கும் அப்பாற்பட்டு ஒரு குழந்தை அது வாழுகின்ற சமுதாயத்தில் கிடைக்கின்ற மாதிரியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

மொழிக்கும் இனத்திற்கும் இயற்கையாகவே தொடர்பு இல்லாததுபோன்று மொழிக்கும் பண்பாட்டிற்கும் இயற்கையாகவே எந்தவிதத் தொடர்புமில்லை. ஓர் இனத்தைச்சார்ந்த ஒருவன் மற்றொரு இனத்தின் மொழியைத் தாய்மொழிக்கு இணையாகக் கற்கும் சமயத்தில் அம்மொழியின் பண்பாட்டை ஓரளவுக்குத் தழுவிக் கொள்கிறான் என்பது உண்மை, இருந்தபோதிலும், பல்வேறு பண்பாட்டுக் கொள்கை உடையவர்கள் ஒரு மொழியையோ அல்லது ஒரு குடும்பத்திலுள்ள மொழிகளையோ பேசிவருகின்றமையையும் நாம் இன்று உலகத்தில் பார்க்கிறோம், பல்வேறு அமெரிக்க இந்திய மொழிகளைக் கொண்ட ஆதபஸ்கண் (Athabaslcan) மொழிக் குடும்பம் பல்வேறு பண்பாடுகளை உடைய மக்கள் இனத்தை ஒன்று சேர்க்கிறது. திராவிட மொழிக் குடும்பத்தைச்சேர்ந்த வடதிராவிட மொழியான பிராகுயி ஆப்கானிஸ்தானத்திலும் பலுசிஸ்தானத்திலும் வாழுகின்ற மக்களால் பேசப்படுகிறது. அம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தென்திராவிட மொழியான தமிழ் தமிழ்நாட்டிலும், மலையாளம் கேரளாவிலும், மத்திய திராவிடமொழியான தெலுங்கு ஆந்திரநாட்டிலும் பேசப்படுகிறது. இதைப்போலவே ஒரே இனத்தையும் பண்பாட்டையும் உடைய மக்கள் பலமொழிகளைப் பேசுவதால் இனமோ பண்பாடோ வேறுபடுவதில்லை. மைசூர் மாநிலத்தில் மட்டுமே கன்னடம், குடகு, துளு ஆகிய மூன்று மொழிகளையும் ஒரே இனம் ஒரே பண்பாட்டை உடைய மக்கள் பேசுகின்றனர். இம் மூன்று மொழிகளும் ஒரே மொழிக்குடும்பத்தைச் சார்ந்தன என்பதும், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையது

என்பதும் இனமும் பண்பாடும் மொழியும் ஒன்ருயிருத்தல் வேண்டும் என்பதற்கு தகுந்த வாதமன்று குடகு மொழியைத் துளு பேசுவோர் எவ்வளவுக்குப் புரிந்து கொள்கின்றனர் என்பதும், துளு மொழியையும் குடகு மொழியையும் கன்னட மொழியைப் பேசுவோர் எவ்வளவுக்குப் புரிந்து கொள்கின்றனர் என்பதை மட்டுமே நோக்க வேண்டும். எனவே, பல்வேறு இனவேறுபாடுகளேயோ அல்லது பண்பாட்டு வேறுபாடுகளே உடையவரோ மொழியையோ அல்லது ஒரு குடும்பத்திலுள்ள மொழிகளேயோ பேசுவது வியப்பன்று. இதைப் போலவே, ஒரே இனமும் பண்பாடும் உடையவர்கள் வேறுபட்ட மொழிகளேயோ அல்லது ஒரு குடும்பத்திலுள்ள மொழிகளேயோ பேசுவதும் வியப்பன்று. மொழியைக் கொண்டு இனத்தைத் தீர்மானிப்பதும், இனத்தால் மொழியைத் தீர்மானிப்பதும், பண்பாட்டால் மொழியை உறுதிப் படுத்துவதும், மொழியால் இன்ன பண்பாட்டை உடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தவும் இன்றைய விஞ்ஞான உலகத்தில் இயலாது என்பது இவ்வெடுத்துக்காட்டுகளின் மூலம் தெளிவாகிறது.

இருந்தபோதிலும், இனத்திற்கும் மொழிக்குமிடையே உள்ள நெருக்கத்தைவிட பண்பாட்டிற்கும் மொழிக்குமிடையே உள்ள நெருக்கம் மிகவும் கெட்டியானது, எடுத்துக்காட்டாக; ஒரு மொழியின் இலக்கியங்களே எடுத்துக் கொள்ளலாம். ஒரு மொழிக்கே உரித்தான இலக்கிய நடை, யாப்பு. அணி போன்றவற்றின் வளர்ச்சி அம்மொழியையும் அம்மொழிப் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. இதற்குச் சமமான மொழி நடையையோ அல்லது யாப்பு அணி, போன்றவற்றையோ மற்ருெரு மொழியில் காணமுடிவதில்லே, மேலும், ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒரு கருத்தை வழங்கும் சொல் இன்னொரு மொழியில் மொழியாக்கம் பெறும்போது பல பிரச்சினேகளேக் கிளப்புவதை

நாம் அறிவோம். அப்பண்பாட்டிற்குச் சமமான பண்பாடு மற்ருெரு மொழியினத்தவரிடையே இல்லை என்பதுடன் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை வழங்கும் சொல்லும் மற்ருெரு மொழியில் மொழியாக்கம் பெறுவது கடினமாகிவிடுகிறது என்பதையே இது காட்டுகிறது.

மொழியும் பண்பாடும் இரு பகுதிகளாயினும் ஒன்றிலுருந்து மற்ருென்றைப் பிரித்து நோக்கமுடியாது என்று கண்டோம். மொழியும் பண்பாட்டில் அடங்குகின்ற ஒரு பகுதி யென்றே இன்னும் கூறலாம். ஏனெனில் ஓர் இனத்தவரின் பண்பாட்டை அறிய உதவுகின்ற பல்வேறு வகைகளுள் மொழியும் ஒன்ருகும். மேலும், ஓர் இனத்தவரின் பண்பாட்டின் எல்லையையும் அப்பண்பாடு மற்ற எல்லைகளுக்குப் பரவி இன்னொரு பண்பாட்டாலும், வேறு கடன் வாங்கிய பண்பாட்டாலும் மாறிய முறைமையையும் மொழியை ஆராய்வதின் மூலம் தெரிந்துகொள்கிருேம், ஓர் ஆதிகால இனத தவரின் கட்டிட முறையையோ வாழ்க்கை முறையையோ தெரிந்து கொண்டு அவர்தம் பண்பாட்டை விளக்குவதைப் போல் மொழியாலும் பண்பாட்டைத் தெரிந்துகொள்ள முடியும். இன்னும் கூறினுல் இவை எல்லாவற்றையும்விட ஓர் இனத்தவரின் பண்பாட்டை நேரடியாகப் புரிந்துகொள்ள மொழி மிகவும் உதவுகிறது என்று கூறலாம். ஹாரப்பா, சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சிகள் இன்று பல உண்மைகளைத் தெளிவாக்கி யிருக்கின்றன. மொழியைப் பற்றியும் சில சான்றுகள் சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த போது அவர்தம் பண்பாட்டை வலியுறுத்தும் வகையில் எத்தனையோ ஆதாரங்கள் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது சமீப காலத்தில் நடத்தப்பட்ட மொழியாராய்ச்சி ஒன்று இராமாயணத்தில் பேசப்படுகிற இலங்கை மாநகரம் இன்றைய இலங்கை (சிலோன்) அன்று என்று தெரிவிக்கிறது. இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற திரு. சங்காலியா

இராமாயணத்தில் பயின்று வந்திருக்கின்ற சொற்கள் பிறந்த காலத்தையும் அவை வழங்கிவந்த இடங்களையும் ஆதாரமாகக் கொண்டு வேறுபல உண்மைகளையும் இவ்வாராய்ச்சியின் மூலம் தந்துள்ளார். இதைப்போல சங்ககால இலக்கியத்தில் பயின்றுவரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைக்காலத் தமிழரின் பண்பாட்டை அறியும் முறையில் எத்தனையோ தமிழ் நூல்கள் இன்று நம்மிடையே உள்ளன. மேற்கூறிய இத்தகைய ஆராய்ச்சிகளும் நூற்களும் மனிதப்பண்பாட்டை அறிந்துகொள்வதற்கு மொழியும் முக்கியமானதொரு கருவியாகும் என்பதைப் புலப்படுத்துகிறது.

தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய பண்பாட்டை வெளிக் கொணரும் ஆற்றல் மொழிக்கு இருக்கிறது என்ற எண்ணம் உள்ளத்திலே வேரூன்றி யிருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஒருவன் பேசுகின்ற மொழியிலிருந்தே மேல் இனத்திலுள்ள ஒருவன் அவனை மிகவும் எளிதாக இனங் கண்டு கொள்கிறான். சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள அதே மனிதன் மேல்தளத்திலுள்ள மனிதர்களால் உயர்வாகப் பேசப்படும்போது தன் பேச்சையும் நடையையும் மாற்றிக்கொள்ள முயற்சிப்பதை அன்றாடம் நாம் வாழ்க்கையில் சந்திக்கிறோம். அவ்வாறு பேசுவதும் நடப்பதும் நாகரீகமுள்ள செயல்களாக அவன் கருதுகிறான். அப்பேச்சின் தோரணையிலும் சொற்களைக் கையாளும் முறையிலும் மேல் இனத்தவரை பாவனை செய்து அவர்களோடு தன்னை இனங்கண்டு கொள்ள முயற்சிக்கிறான், ஆனால், அதே மனிதன் அவன் பண்பாட்டிற்கே உரிய சொல்லை எப்பொழுதாவது தன்னையும் அறியாமல் உபயோகிக்கின்றபோது, பிறரால் எளிதாக இனங்கண்டு கொள்ளப்படுகிறான். இதைப்போலவே 'குப்பி' என்ற சொல்லை சீசாவைக் குறிப்பிடவும் 'தட்டு' என்ற சொல்லை, மாடியைக்

குறிப்பிடவும் 'சமட்டினுன்' என்ற சொல்லே மிதித்தான் என்பதைக் குறிப்பிடவும் ஒருவர் உபயோகிக்கின்றபோது அவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதை நாம் தெரிந்து கொள்கிறும். அவர்களும் தமிழையே பேசுகின்றனர் என்ருலும் அருகிலுள்ள மலேயாள மொழியிலுள்ள சொற்கள் பல தங்கு தடையின்றி அவர்கள் பேசுகின்ற கிளேத்தமிழ் மொழியில் (Dialect of Tamil Language) வந்து வழங்குகின்றன. ஓரளவிற்கு மலேயாளப் பண்பாட்டையும் இவர்களுடைய பழக்க வழக்கங்களில் காணலாம். இவ்வாறே கொங்குநாட்டவர் தமிழிலும் கன்னட சொற்கள் பல காணப் படுகின்றன. சுருங்கக் கூறினுல், மனிதனின் எல்லா வாழ்க்கை நிலேகளிலும் மொழி முக்கியத்துவம் பெறுவதோ டன்றி சமுதாயத்தின் கட்டுப்பாட்டிலேயே அதனுடைய வளர்ச்சியும் மாற்றமும் அடங்கி இருக்கின்றன.

ஒரு மொழியின் பொருள் உறுப்புகளே (Semamtic Conysonent) விளக்குவதற்கு அம்மொழி பேசுவோரின் பண்பாட்டைப் பற்றிய அறிவும் முக்கியமானது ஆகும் என்று கருதுகிருர் கிரீன்பெக் என்ற மொழி நூலறிஞர், எத்தனேயோ சொற்கள் பண்பாட்டை விளக்குவனவாகக் காணப்படுகின் றன. இதனுலேயே ஒரு மொழியின் சொல்லகராதியைத் தொடுக்கும்போது மொழிநூலறிஞரும் பண்பாட்டை ஆராயும் அறிஞரும் அப்பணியில் இணேந்தே ஈடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிருர். இதைப்போலவே உளவியலாரின் பங்கும் மொழியின் பல்வேறு நிலேகளில் முக்கியமானதாகும்.

———

## வேண்டுகோள்

தெந்தமிழ் மூன்றுவது இதழைச் சமய விளக்கு ஏற்றி வைத்த சான்றோர், இராசாபாசுகர சேதுபதியவர்களது சிறப்பு மலராக வெளியிட எண்ணியுள்ளோம்.

அறிஞர் பெருமக்கள் அனைவரும் உறுதுணையாக வேண்டுகிறோம். வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இச்சேதுபதி யவர்கள் தமிழ்வளர்த்த மாண்பும், சிறப்பியல்புகளையும் எழுத் தோவியமாக்கித் தந்துதவ பணிவுடன் வேண்டுகிறோம்;

*செந்தமிழ் ஏடு ஆசியர் குழு.*

---

செந்தமிழ் ஏட்டில் மதிப்புரை வெளியிடுமாறு வேண் டிப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

### பெருமழைப்புலவர் மறைவு

சங்க நூற் பெரும் புலவரும் சிறந்த உரையாசி ரியரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவரு மான பொ. வே. சோமசுந்தரனுர் அவர்கள் தம் 65-ம் அகவையில் சனவரித்திங்கள் 3-ஆம் நாள் காலை 11 மணியளவில் மறைவுற்றுர்கள். இத்தகைய சிறந்த புலவரின் பெரும் பிரிவு தமிழுக்கும், தமிழ் உலகிற்கும் பேரிழப்பாகும்; மதுரைத் தமிழ்ச்சங்கமும் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

# திராவிட மொழிகளில்
# மென்றொடர்ப் புகர ஈற்றுச் சொற்கள்

இரா. கோதண்டராமன் எம்.ஏ. (தமிழ்). எம்.ஏ (மொழியியல்)
மொழியியல் துறை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திராவிட மொழிகளில் உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில் கொண்டு வழங்கும் சொற்களை மென்றொடர் வல்லீற்றுச் சொற்கள் எனவும், வன்றொடர் வல்லீற்றுச் சொற்கள் எனவும் இருவகையாகப் பிரிக்கலாம். மெல்லொலியைத் தொடர்ந்து உகரம் ஊர்ந்த வல்லொலி ஈருக அமையும் சொற்கள் மென்றொடர் வல்லீற்றுச் சொற்கள் எனவும் வல்லொற்றையடுத்து உகரம் ஊர்ந்த வல்லொலி ஈருக அமையும் சொற்கள் வன்றொடர் வல்லீற்றுச் சொற்கள் எனவும் பெயர்பெறும். மென்றொடர் வல்லீற்றுச் சொற்களில் உகரம் ஊர்ந்த பகர மெய்யை ஈருகக் கொண்ட சொற்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய திராவிட மொழிகளில் அமையுமாற்றைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.[1] இக்கட்டுரையில் காட்டப் பெறும் பெரும்பாலான எடுத்துக்காட்டுக்கள் Dravidian Etymological Dictionary (DED) என்னும் நூலினின்றும் எடுக்கப்பெற்றவையாகும்.

---

1. *தமிழ், மலையாளம் போன்ற மொழிகள் தவிர, ஏனைய திராவிட மொழிகளில் மெல்லொலிகளின் பின் நிகழும் வல்லொலிகள் நிலை யொலியன்* (Voiceless phonemes) *களாகவும், அலை யொலியன்* (Vocied Phonemes) *களாகவும் ஒலிக்கப்பெறும் நிலை காணப்பெறுகிறது. தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் மெல்லொலியைத் தொடர்ந்து ஓசை நிலை* (Phonetic Level) *யிலும் ஒலியன் நிலை* (Phonemic Level) *யிலும் அலையொலித் தன்மையினவாக அமைந்த புகர ஈற்றுச் சொற்கள் மட்டுமே இவ் ஆய்வில் கருத்தில் கொள்ளப் பெறுகின்றன.*

1. தமிழ் (த) அலம்பு. கன்னடம் (கன்), அலம்பு, அலபு (alabu) தெலுங்கு (தெ). அலமு (DED 208)
2. த; ஓம்பு. கன். ஓவு. தெ. ஓமு (DED 891)
3. த. சிலும்பு. கன் கிலும்பு, கிலுபு (Kilubu), கிலுவு. துளு, கிலுபு (Kilubu), கிலுமு. தெ. கிலுமு, (சிலுமு). (DED 1320)
4. த. தூம்பு. கன். தூபு (tu : bu), தூம்பு. தெ தூமு (DED 2786)
5. த. நரம்பு. கோத்தம். நர்ப் (narb), (நர்வ்) தொதுவம் நர்ப் (narb) கன். நரவு. துளு. நரம்பு. தெ. நரமு. பர்ஜி. நெருப் (nerb) (DED 2364)
6. த. உறும்பு. கன். உறுபு (uRubu). தெ. உறுமு (DED 616)
7. த. பாம்பு. கோத்தம். பாப் (pa. b). கன். பாவு. தெ. பாமு நாய்க்கி. பாம் (DED 3316)
8. த. வேம்பு. கன். துளு பேவு (be : vu), தெ. வேமு. (DED 4551)
9. கன். கடும்பு, கடுபு (kaDubu). துளு கடுபு (kaDubu). தெ. கடுமு. (DED 955)
10. த. கடம்பு. கன். கடவு. தெ, கடுமு (DED 937)
11. த. காம்பு. கன் காவு. தெ காம (DED 1216)
12. த. தறும்பு. கன். தறும்பு, தறுபு (taRubu). (DED 2565)
13. த. துறும்பு. கன். துறும்பு, துறுபு (tuRubu). தெ. துறுமு. (DED 2770)
14. த. வரம்பு. துளு. பரபு (barabu) (DED 4301)
15. த. எலும்பு கன். எலுபு (elubu), எலுவு (DED 714)
16. த. இடும்பு தெ. இடுமு (DED 369)
17. த. உடும்பு. தெ. உடுமு (DED 509)
18. த. துளும்பு தெ. துலுமு (DED 2764)
19. த. நாம்பு. தெ. நாமு (DED 3021)

20. த. நேம்பு தெ. நேமு (DED 3123)

இவ் எடுத்துக் காட்டுகளினின்றும் தமிழில் புகரக்கிள வியின்முன் மெல்லொலி நிலைபெற்றிருப்பதும், கன்னடத் தில் அம்மெல்லொலி கெட்டு நிற்பதும், தெலுங்கில் மெல் லொலியும் அதன்பின் நிகழும் புகரக்கிளவியும் சேர்ந்து உகரம் ஊர்ந்த மகரமாகத்திரிந்து நிற்பதும் தெளிவாகின் றன கன்னடத்தில் மெல்லொலி வீழ்ந்த நிலையில் உயிர்க ளிடையில் தனித்து நிற்கும் அலையொலியனாகிய (Voiced Phoneme) பகர ஒற்று வகரமாகத் திரிந்தும் திரியா மலும் நடைபெறும் நிலையும் காணப்பெறுகின்றது இந்நிலை கன்னடத்துக்கு மட்டுமே உரியதன்று. தமிழிலும் உயிர்களி டைத் தனித்து நிகழும் பகரம் வகரமாகத் திரிந்தும் திரியா மலும் அமையும் போக்கைப் பின்வரும் எடுத்துக்காட்டுக் களில் காணலாம்.

21. அளபு — அளவு
22. இழிபு — இழிவு
23. உருபு — உருவு
24. பணிபு— பணிவு
25. நலிபு — நலிவு
26. மலிபு — மலிவு
27. முடிபு — முடிவு
28. துணிபு—துணிவு
29. பிரிபு — பிரிவு
30. திரிபு — திரிவு

மென்றொடர்ப்புகர ஈற்றுச் சொற்கள் (1-20) தமிழ், கன்னடம், துளு ஆகிய மொழிகளில் அமையும் போக்கைக் கருத்தில் கொண்டு இவ்இணைச் சொற்களின் (21-30) முந் திய வடிவங்களை முறையே * அளம்பு * இழிம்பு, * உரும்பு, * பணிம்பு, * நலிம்பு, * மலிம்பு முடிம்பு, * துணிம்பு, * பிரிம்பு, * திரிம்பு என உருவமைக்கலாம். இவ்வடிவங்களில் ஈற்றில் நிகழும் புகரக்கிளவி அலையொலித் தன்மையினதாக அமை யாமல் நிலையொலித்தன்மையினதாக நடைபெற்றிருந்தால், மகரமெல்லொலி வீழ்ந்த நிலையில் அது வகரமாகத்திரிந் திருக்க முடியாது. ஆகவே உருவமைக்கப்பெற்ற இச்சொற்

களில் புகரக்கிளவி அலையொலித்தன்மையது என்பது தெளிவாகின்றது. தொடக்கத்தில் வல்லொற்றுக்கள் மெல்லொலியின் பின் நிலையொலித்தன்மையினவாக நடைபெற்று, பின்னர் அலையொலித்தன்மையவாகத் திரிந்தனவாதலால் உருவமைக்கப்பெற்ற இவ்வடிவங்கள் அனைத்தும் மூலமொழியில் நிலையொலித்தன்மையுள்ள வல்லொற்றை ஈற்றில்கொண்டனவாகத் துணியலாம்.

தெலுங்கில் மகரமெல்லொலியும் அதனையடுத்து ஈற்றில் நிகழும் புகரக்கிளவியும் இணைந்து, உகரம் ஊர்ந்த மகரமாகத் திரியும் நிலையை முதல் இருபது எடுத்துக்காட்டுக்களில் கண்டோம். இத்திரிபு நேரடியாக நிகழ்ந்ததாகக் கொள்வதற்கில்லை. குறிலையடுத்து நிகழும் **—ம்பு** என்னும் ஒலித்தொடர் **—ம்மு** எனத்திரிந்தமையும் நிலை தெலுங்கில் காணப்படுகின்றது.

| **தமிழ்** | **தெலுங்கு** |
|---|---|
| அம்பு | அம்மு (DED 150) |
| கொம்பு | கொம்மு (DED 1759. கொண்டமொழி, ***கொமு.*** |
| நம்பு | நம்மு (DED 2975) |
| நெம்பு | நெம்மு (DED 3102) |
| வெம்பு | வெம்மு (DED 4540) |
| வம்பு | வம்மு (DED 4293) |

இத்தகைய மாற்றம் தொடக்கத்தில் ஈரசைக்கு மேற்பட்ட சொற்களிலும், நெடிலைத் தொடர்ந்து **—ம்பு** நிகழும் சொற்களிலும் நடைபெற்றதாகக் கருதலாம். இதனைக் கருத்தில் கொண்டு **—ம்பு** என்னும் ஒலித்தொடர் தெலுங்கில் **—ம்மு** எனத்திரிந்து பின்னர் **—மு** என ஒடுங்கியது என்று கொள்ளலாம். பின்வரும் முகர ஈற்றுத் தெலுங்குச் சொற்களை இவ்வகையில் ஆராயலாம்.

அயமு < * அலம்மு < அலம்பு (DED 208)
ஓமு < * ஓம்மு < ஓம்பு (DED 891)
கிலுமு < * கிலும்மு < கிலும்பு (DED 1320)
தூமு < * தூம்மு < தூம்பு (DED 2786)
நரமு < * நரம்மு < நரம்பு (DED 2364)
உறுமு < * உறும்மு < உறும்பு (DED 616)
பாமு < * பாம்மு < பாம்பு (DED 3361)
வேமு < * வேம்மு < வேம்பு (DED 4551)
கடுமு < * கடும்மு < கடும்பு (DED 955)
உடுமு < * உடும்மு < உடும்பு (DED 509)
நாமு < * நாம்மு < நாம்பு (DED 3021)
நேமு < * நேம்மு < நேம்பு (DED 3123)

பழந்தெலுங்கில் ஏவல்வினைகள் உகரம் ஊர்ந்த மகர ஈற்றனவாக விளங்கின. இவற்றை வரலாற்று நிலையில் முற்றுப்பொருண்மையை உணர்த்திய செய்பு வாய்பாட்டு வினைகளாகக் கொண்டு, பின்வருமாறு அவற்றின் தொன்மை வடிவங்களை உருவமைக்கலாம்.

தினுமு 'தின்' < * தினும்மு < * தினும்பு (* தின்-உம்-பு)
சேயுமு 'செய்' <* சேயும்மு < * சேயும்பு(* சேய்-உம்-பு)
கோயுமு 'கொய்' < *கோயும்மு < *கோயும்பு (*கோய்-உம்-பு)
வெள்ளுமு 'செல்' <*வெள்ளும்மு <*வெள்ம்பு(*வெள்-உம்-பு)
செப்புமு 'சொல்' <*செப்பும்மு < * செப்பும்பு (*செப்பு-உம்-பு)
ஆடுமு 'ஆடு' < * ஆடும்மு < * ஆடும்பு (* ஆடு-உம்-பு)
நிலுவுமு 'நில்' < * நிலுவும்மு < * நிலுவும்பு (*நிலுவு-உம்-பு)

மெல்லொலி வீழ்ந்த நிலையில் உயிர்களிடைத் தனித்து நிகழும் பகரம் வகரமாகத் திரிந்தும் திரியாமலும் அமையும் நிலையை முந்திய (1-20) எடுத்துக்காட்டுக்களில் கண்டோம். இத்தகைய திரிபைப் பின்னர் தமிழிலும் (21-30) கண்டோம். இதனை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கில் வழங்கும்

உகரம் ஊர்ந்த வகர ஈற்று வினையடிகளின் தொன்மை வடிவங்களையும் உருவமைக்கலாம்.

பிலுவு 'அழை' < * பிலுபு (pilubu) < * பிலும்பு (*பில்–உம்–பு)
நடுவு 'நட' < * நடுபு (naDubu) < * நடும்பு (*நடு–உம்–பு)
பிடுவு 'பிழி' < * பிடுபு (pidubu) < * பிடும்பு (*பிடு–உம்–பு)
கொலுவு 'அள' < *கொலுபு (kolubu) < * கொலும்பு (* கொல் உம்–பு)
செருவு 'புடை' < * செருபு (cerubu) < * செரும்பு (* செர்– உம்–பு)
ஏடுவு 'அழு' < * ஏடுபு (e:Dubu) < * ஏடும்பு (* ஏடு–உம்–பு)
ஈடுவு 'இழு' < * ஈடுபு (i:Dubu) < * ஈடும்பு (*ஈடு–உம்–பு)
கடுவு 'கழுவு' < * கடுபு (kaDubu) < * கடும்பு (*கடு-உம்-பு)
துடுவு 'துடை' < * துடுபு (tuDubu) < * துடும்பு(*துடு-உம்-பு)

ஈற்றில் உகரம் ஊர்ந்த மகரமும், வகரமும் பொருந்திய இருவகைத் தெலுங்கு வினையடிகளின் தொன்மை வடிவங்கள் மேலே ஆராயப்பெற்றன. இவ் இருவகை வினையடிகளும் * செய்-உம்-பு என்ற வாய்பாட்டு அமைப்பினவாகி வரலாற்று நிலையில் முற்றுப் பொருண்மையை உணர்த்தினவாகக் கொள்ளலாம்.

தமிழில் பின்னல் தொடரன் (Complex Sentences) களில் அமைந்தியலும் **செய்யும்படி** என்னும் வாய்பாட்டு வினையடை (Adverbs) களை உற்றுநோக்கும்போது, தமிழிலும் ***செய்-உம்-பு** என்ற வாய்பாட்டு வினைகள் பயின்று வழங்கியிருக்கக் கூடுமோ என்று கருதத்தோன்றுகிறது. வரலாற்று நிலையில் **செய்யும்படி** என்னும் வாய்பாட்டு வடிவங்கள் * **செய்யும்படி** (< * செய்-உம்-பு) + அடி[1] என்னும் அமைப்பினவாக நின்று பின்னர் * **செய்யும்பு**-வாய்பாட்டு வினைகளின் ஈற்றில் உள்ள பகரமெய்பிதழ் பிரிப்பின் விளைவாக —**அடி** என்பதன் உறுப்

பாக அமைந்திருக்ககூடும். தெலுங்கில் ஆராயப்பெற்ற இருவகை வினையடியகளின் தொன்மை வடிவங்களுடன் இவ்வினைகள் ஒத்தியல்வதை அறியலாம். **செய்வாய் செய்வீர்** ஆகிய இரு வாய்பாட்டு வினைகளும் எதிர்வுப்பொருண்மை யையும் ஏவற்பொருண்மையையும் ஒருங்கே உணர்த்தி நிற்கும் நிலை இன்றும் இலக்கிய வழக்கில் காணப்படுகின்றது. இதே போல் * **செய்யும்பு** வாய்பாட்டு வினைகளும் தொடக்கத்தில் எதிர்வுப் பொருண்மையையும ஏவற் பொருண்மையையும் உணர்த்தினவாகக் கருதலாம் [2].

சங்கப் பாடல்களில் வினையெச்சப் பொருண்மையை உணர்த்தும் செய்பு வாய்பாட்டு வினைகளை ***செய்யும்பு** வாய் பாட்டு வினைகளின் திரிபாகவே கொள்ளத் தோன்றுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் இச்செய்பு வாய்பாட்டு வினைகள் தனித் தொடரன்களில் (Simple sentences) பயனிலையாக அமையும் நிலையை இழந்து பின்னல் தொடரன்களில் மட்டுமே இடம் பெற்று வினையெச்சப் பொருண்மையை உணர்த்தி நின்றனவாதல் வேண்டும், சங்க இலக்கியங்களில் செய்பு வாய்பாட்டு வினைகள் பொதுவாக இறந்தகால வினையெச்சங் களாகவே வழங்குகின்றன. காலப்பொருண்மையில் நிகழ்ந்த இப்பிறழ்ச்சிக்குரிய காரணங்களை இப்போதைக்குத் திட்ட வட்டமாகக் கூறமுடியவில்லையாயினும், ஒரு காரணத்தை மட்டும் எண்ணிப் பார்க்கலாம் செய்து வாய்பாட்டுவினை யெச்சங்கள் தம்மையடுத்து இறந்தகால வினைமுற்றும், ஏனைய கால வினைமுற்றும், நிகழும்போது முறையே இறந்தகாலப் பொருண்மையையும், ஏனையகாலப் பொருண்மையையும் உணர்த்தற்பாலனவாகும். இவ்வாறே செய்பு வாய்பாட்டு வினையெச்சங்களிலும் நிகழ்ந்திருக்கலாம். சங்கப்பாடல்களில் செயபுவாய்பாட்டு வினையெச்சங்கள் அவாவிற்கும் வினைப் பயனிலைகள் பொதுவாக இறந்தகாலத்தனவாகவே காணப்

படுவதால், அவற்றுக்கொப்ப செய்புவாய்பாட்டு வினைகள் இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தத் தொடங்கியிருக்கக் கூடும்.

---

*1. செய்யும்பு வாய்பாட்டு வடிவங்களைத் தொடர்ந்து அமையும்-அடி என்னும் சொல்லின் பொருண்மை தெற்றெனப் புலப்படவில்லையாயினும் இப்போதைக்கு 'அப்படி' என்னும் பொருண்மையை உணர்த்தும் - அட்ட என்னும் தெலுங்குச் சொல்லுடன் இதனைப் பொருத்திப் பார்க்கலாம்.*

*2. இவ்வாறே செய்யும் வாய்பாட்டு வினைகளும் எதிர்வு அல்லது நிகழ்வெதிர்வுப் பொருண்மையையும், ஏவற்பொருண்மையும் தொடக்கத்தில் உணர்தினவாகக் கருதலாம். செய்ம்மோ (செய்யும் - ஓ < (ஓய்) வாய்பாட்டு வினைகளில் அமைந்துள்ள செய்யும் வாய்பாட்டு வினைகள் ஒருமை ஏவற்பொருண்மையை உணர்த்துவனவாகும்.*

---